www.tamilarangam.net

# களத்தில்

(23.09. 1998 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் ஞ170 அன்பளிப்பு: 60 p

இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருசனாக அவன் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.

- திலீபன் -

15 . 09 . 98 – 26 . 09 . 98

## வன்னியில் தொடரும் மக்கள் போராட்டம்

வன்னியில் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம் முன்பாக தமிழ் மக்கள் உணவு கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். மாணவர்களும் பெருமளவில் கலந்து கொள்ளும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் நீர் கூட அருந்தாது அனைவரும் ஆர்வத்துடன் உண்ணா நோன்பு தொடுத்து வருவதாக வன்னியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் இந்த இக்கட்டான நிலையிலும், அன்பான பண்பான முறையில் மக்கள் தமது சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....

# எங்கள் உடன் பிறப்புக்களை பட்டினிச் சாவுக்கு உள்ளாக அனுமதியோம்

❁ பொங்கியெழுந்த புலம்பெயர் தமிழர்கள் ஐ. நா. செயலாளருக்கு விண்ணப்பம்

❁ இலண்டன் உட்பட உலக தலைநகர்களில் தமிழர்கள் சாத்வீகப் போராட்டம்

வன்னியில் உணவை அனுமதிக்கும்படி தமிழீழ மக்கள் நடாத்தி வரும் அடையாள உண்ணா விரதங்கள் உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களிடையேயும் சகோதர வாஞ்சையைப் பெருக வைத்துள்ளது. 'எங்கள் உடன்பிறப்புக்களை பட்டினிச் சாவுக்கு உட்படுத்தும் நோக்குடன் சிறிலங்கா உணவை ஆயுதமாக்கியுள்ளமையை நாம் உடைத்தெறிவோம். நாமெல்லாம் உலக நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில் எங்கள் சகோதரர்களை யாருமற்ற ஏதிலிகள் போல் சிறிலங்கா பட்டினியால் இன அழிப்பு செய்ய முடியாது. எங்கள் உடன் பிறப்புக்களில் ஒருவர் பட்டினியால் செத்தாலும் அதனை தடுப்பதற்கு பாடுபடாத குற்றம் எங்களை வந்தடையும். இதற்கு நாங்கள் அனுமதியோம்'

தொடர்ச்சி 4ம் பக்கம்.....

### தமிழ் நேசன் கணனி வலையில் ஐ.நா. பொதுச் செயலருக்கு மாதிரிக் கடிதம்

வன்னி மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக புலம்பெயர் தமிழர்கள் தங்கள் சகோதரர்கள் உணவுத் தடையினால் பட்டினிச் சாவு நிலைக்குச் செல்வதைத் தடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் மதிப்புக்குரிய கோபி அனானுக்கு கடிதங்கள் அனுப்பத் தொடங்கியுள்ளனர்.

தமிழ்நேசன் கணனி வலயத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரிக் கடிதம் வருமாறு :-

அன்புக்கும் மதிப்புக்குமுரிய கோபி அனான் அவர்கட்கு,

ஆவணி 8, 1990 முதல் தமிழர் தாயகத்தின் வடபகுதி வாழ் மக்களை வதைக்கும் முகமாக சிறிலங்கா அரசு உணவு, மருந்து, மின்சாரம், எரிபொருள்கள் உட்பட பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியுள்ளது. இந்த கடுமையான பொருளாதாரத் தடையினால் தோன்றியுள்ள போசாக்கின்மையினாலும் மருந்துப் பற்றாக் குறைகளினாலும் மரணங்கள் நேர்ந்து வருகின்றன. இந்த நிலைக்கு, சிறிலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் மீது உணவை ஆயுதமாகப் பயன்படுத்துவதே என

தொடர்ச்சி 4 ம் பக்கம்.....



அரக்கி வரும் கவசத்தை அழிக்க நிற்கும் பெண்புலிகள்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிபூரணமாக கிளர்ந்தெழுவீர்களாயின் தமிழீழ விடுதலையை யாராலும் தடுக்க முடியாது. இந்தப் பொறுப்பை உங்களிடம் விட்டுச் செல்கின்றேன் என்று விடைபெற்றவர் எங்கள் தியாகதீபம் அகிம்சா மூர்த்தி திலீபன். அவரின் 11வது ஆண்டு இம்மாதம் 26ம் திகதி தமிழீழத்திலும் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கும் பக்திச் சிரத்தையுடன் கொண்டாடப்படுகின்றது. உறுதியான உள்ளம்- போராட்டத் தலைமையின் மேல் அசைக்க முடியா நம்பிக்கை-மக்கள் வாழ்வு நலம் பெறத் தம் வாழ்வையே அர்ப்பணிக்கும் உயர்ந்த பண்பு இதுதான் தமிழீழ விடுதலைப் புலிப் போராளி என்பவனின் வரைவிலக்கணம். அந்த வரைவிலக்கணத்துடன் ஆயுதக்களத்தில் மட்டுமல்ல சாத்வீக களத்திலும் போராடும் வலிமை படைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களைப் பயங்கரவாதிகள் எனப் பெயரிடும் சிறிலங்காவுக்குத் துணை போகின்றவர்கள் தியாகி திலீபனதும் அன்னை பூபதியினதும் புனித வரலாறுகளை அறியாதவர்களாக அல்லது மறந்தவர்களாகவே இருப்பர். இதனால் தியாகி திலீபனதும் அன்னை பூபதி அவர்களதும் உன்னதங்களை உலகுக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு புலம்பெயர் தமிழர்களாகிய நமது கடமை.

மேலும் திலீபன் காட்டிய அதே சாத்வீக ஆயுதத்தை தாமும் ஏந்தி இன்று வன்னி மண்ணிலே தமிழீழ மக்கள் சிறிலங்கா தமக்கு உணவை மறுப்பதை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டங்களில் இறங்கி நிற்பதை நாம் அறிவோம். திலீபனின் உண்ணாவிரதம் அமைதிப்படை என்ற பெயரில் குவிக்கப்பட்ட இந்திய இராணுவ வல்லாண்மை கொண்டு பிராந்திய நலன்களுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டம் பலியாக்கப்பட இருந்த பேரபாயத்திலிருந்து தமிழீழ மக்களைக் காத்தது. திலீபனின் சாவால் தமிழீழ மக்கள் சுய உணர்வு பெற்று இந்திய மாயையிலிருந்து விடுபட்டு பொங்கியெழுந்தனர். யாருடைய தயவிலும் தங்கிநிற்காது மக்கள் தாமே போராடிப் பெற வேண்டியது சுதந்திரம் என்ற உண்மை மக்களுக்குத் திலீபனால் உணர்த்தப்பட்டதினால் தேசிய விடுதலைப் போராட்டம் வீறு கொண்டெழுந்து இன்று வரை யாருடைய தயவிலும் தங்காது மக்களில் மக்கள் சக்தியில் தங்கி நின்று வீர வரலாறு படைத்து நிற்கின்றது.

இதனை நன்கு இனங்கண்ட சிறிலங்கா மக்களை- மக்கள் சக்தியை இல்லாதொழிப்பதனை தனது அரசியல் இராணுவ இலக்குகளாகக் கொண்டு இயங்கி வருகின்றது. புத்தி ஜீவித் தன்மையினைக் கொண்டு தமிழ் மக்களை அழிப்பதில் கைதேர்ந்த குடும்பமாகிய பண்டாரநாயக்கா குடும்பம் சிங்கள பௌத்த பேரினவாதம் சோர்வடையும் நேரமெல்லாம், தமது புத்தி ஜீவித் தன்மையைக் கொண்டு அதற்குப் புத்துயிர் கொடுத்து வருவதை, இலங்கைத் தீவின் நவீன வரலாற்றை அறிந்த அனைவரும் அறிவர். தமிழ் மக்களின் பொருளாதார வலிமையை உடைத்தெறிதல் என்பது சிங்களப் பேரினவாதத்தின் ஒரு தலையாய அம்சம். இது யுத்தத்தால் தோன்றிய அல்லது புலிகளால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல. யுத்தம் தோன்றுவதற்கு வித்திட்ட மூலகாரணி. எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்காவால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழ் மக்களின் பொருளாதார ஆக்கத் தன்மை தடுக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகம் அபகரிக்கப்பட்டதும் அல்லாமல் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரம் முற்று முழுதாக மாற்றியமைக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி என்பதன் பொருளே சிங்களவர் செய்வதைத் தமிழர் அனுபவிப்பது என்ற நிலையாக்கப்பட்டது. கண்ணீரை, ஆட்சியை அடைவதற்கு ஆயுதமாக்கிய சிறிமாவோ பண்டாரநாயக்கா, தமிழ் மக்களின் கல்வியை தரைமட்டமாக்கி அவர்களை செயலிழக்க வைப்பதை மையமாகக் கொண்டு இயங்கினார். அது மட்டுமல்ல தமிழின அழிப்புக்கு தடையாக இருந்த சோல்பரி அரசியலமைப்பையே பெரும்பான்மை பிரதிநிதித்துவ பலம் கொண்டு வன்முறைப்படுத்தி, தமிழ் மக்களை நாடற்ற தேசஇனமாக்கி பொலிசாரை இராணுவமாகச் செயற்பட அனுமதித்து சட்டம் ஒழுங்கு என்பவற்றையெல்லாம் அர்த்தமற்றதாக்கி இலங்கைத் தீவில் யுத்த நிலை தோன்றுவதற்கு வித்திட்டார். அமைதிப் புறாவாக வேடமிட்டு இலங்கைத் தீவில் வட்டமிட்டு கண்ணீரை ஆட்சியை அடைவதற்கான ஆயுதமாக்கி ஆட்சி அமைத்த சந்திரிகா, தான் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பிணந்தின்னும் கழுகு என்பதை நிரூபித்தது மட்டுமல்லாமல், தாய் தந்தையின் வழியில் தமிழ் மக்களை - தமிழ் மக்கள் சக்தியை இல்லாதொழிக்கும் தமது அரசியல் இலக்கை எய்துவதற்கான புத்தி ஜீவித் தனத்தை இராணுவ



## பரிபூரணமாக கிளர்ந்தெழுவோம்

ஆக்கிரமிப்புடன் இணைத்தார். ஆனால் இதனை இனங்கண்டு மக்களைப் பாதுகாக்கும் கவசமாக - தமிழீழ மக்களுக்குத் தேசிய பாதுகாப்பை வழங்க வலிமையுள்ள அரசு நோக்கிய அரசாக தமிழீழ விடுதலைப் புலிகள் விளங்குவதைக் கண்ட சந்திரிகா ,முதலில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித் தொழிப்பதற்கான அரசியல் இராணுவ இராஜதந்திர முயற்சிகள் எல்லாவற்றையுமே செய்து பார்த்தார். தேச விடுதலையை தங்கள் மக்களின் பாதுகாப்பான அமைதியை தங்கள் உயிரிலும் மேலானதாக கருதும் தமிழீழ மக்களின் தியாக மறவர் திருக்கூட்டத்தையும் தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்து உயர்ந்து நிற்கும் தேசத்தலைவர் பிரபாகரனையும் அசைக்க முடியாது எனக் கண்டு தோல்விக்கு மேல் தோல்வியாக இராணுவத் தோல்விகளையும் அரசியல் தோல்விகளையும் தழுவி வரும் சந்திரிகா, அப்பாவித் தமிழ் மக்களுக்கான உணவை மருந்தை மருத்துவ வசதிகளை தடைசெய்வதன் மூலம் மக்களைப் பட்டினிச் சாவுக்கு உள்ளாக்கி அவர்களின் அரசியல் பணி வைப் பெறுவதற்கான கொடுமையிலும் கொடுமையான செயல்முறைகளில் இறங்கி நிற்கின்றார். இதற்கு வெளி நாட்டு உதவிகளும் ஆயுத வழங்கல்களும் பக்கத் துணையாக உள்ளன. இச் சூழலில் உணவை மறுக்கும் சிறிலங்கா அரசாங்கம் மட்டுமல்ல அதற்கு உதவும் சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் கூட ஐக்கிய நாடுகளின் சர்வதேச சட்டங்களின்படி இனஅழிப்புக்கு துணைபோன குற்றவாளிகளாக உள்ளனர். ஆகவே நேற்று இந்திய அரசாங்கம் செய்த அதே தவறை இன்று உலக நாடுகளும் அமைப்புக்களும் செய்யக் கூடாது என்பதை சுட்டிக்காட்ட தமிழீழ மக்கள் தம்மிடையே செயற்படும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் இடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் மகஜர்கள் கொடுத்தனர். காலக் கெடு கொடுத்து தமக்கு உதவும்படி கேட்டனர். பதில் இல்லை. பசியும் பட்டினி நிலையும் பிணியும் வளர்ந்து கொண்டே செல்கின்றது.

இந்நிலையில் தமக்கு உணவு கிடைக்கும் வரை சிறிலங்கா அரசாங்கத்தின் நிர்வாக அலகுகளை மட்டுமல்ல சர்வதேச அரசசார்பற்ற நிறு வனங்களின் வன்னிப் பிரதேச அலுவலகங்களையும் இயங்க விட மாட்டோம் எனப் பசியால் துடிக்கும் தமக்கு உதவ யாருமே இல்லையே இது என்ன உலக நீதியென நெஞ்சு வெடிக்கும் தமிழீழ மக்கள் வன்னியில் சாத்வீகப் போராட்டத்தில் யூலை முதலாம் திகதி முதல் குதித்துள்ளனர். மக்கள் ஒவ்வொருவரும் போராடும் நிலைக்கு உந்தப்பட்டுள்ளனர். இது தான் திலீபன் விடுத்த பரிபூரணமாகக் கிளர்ந்தெழுங்கள் என்ற அழைப்பின் பொருள். இந்த அழைப்பு ஒவ்வொரு தமிழ் நெஞ்சினையும் தொட்டழைக்கின்றது. ஒவ்வொருவரும் அவர்கள் எங்கு வாழ்ந்தால் என்ன- எப்படி வாழ்ந்தாலென்ன தமது இயல்புகளுக்கு ஏற்ப தமிழீழ மக்களின் இந்த பரிபூரண கிளர்ச்சியில் பங்கேற்க வேண்டிய நேரமிது. அதிலும் குறிப்பாகத் தமிழீழ மக்களின் உலகளாவிய நீட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழ் மக்கள் திலீபனின் ஆத்மாவின் அழைப்பை ஏற்று தம் தமிழீழ உடன் பிறப்புக்கள் திலீபனின் வழியில் தொடங்கியுள்ள சாத்வீக யாகத் தீயின் தேவையினை உலகிற்கு உணர்த்தி அதனை நிறைவேற்றுவதற்கு உலக நாடுகளுக்கு அமைப்புக்களுக்கு உள்ள கடமையை பொறுப்பை உணர்த்திட வேண்டும். எப்படி இதனைச் செய்யலாம்- எங்கு எம் மக்கள் இத்தகைய சாத்வீகப் போராட்டங்களை தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவித்து நடாத்துகின்றன? போன்ற விடயங்களை எல்லாம் உலகெங்கும் உள்ள சர்வதேச தமிழர் சம்மேளனம், தமிழர் மனித உரிமை மையங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு அறிந்து செயற்படுமாறு களத்தில் பத்திரிகை மூலமாக உங்கள் உடன் பிறப்புக்கள் அழைக்கின்றோம். எம்மைப் பெற்று வளர்த்து அன்பைப் பொழிந்த தாய் தந்தை- கூடி வாழ்ந்து கோடி நன்மை செய்த சகோதரர்கள் நண்பர்கள்- நாம் உருவாக உழைத்த விவசாயிகள், தொழிலாளிகள் உழைப்பாளிகள் - நாம் போற்றிய ஆன்மீகக் குரவர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள் - எங்கள் தமிழ் இளம் குழந்தைகள், தாய்மை பேறுற்ற சகோதரிகள், நோயாளிகள், வயது முதிர்ந்த பெரியவர்கள் - என எல்லோருமெ பசியால் துடிக்க பட்டினியால் சாகும் நிலைக்குத் தள்ளப்பட நாம் பொறுப்பற்றவர்களாக வாழ்வோமானால் வரலாற்றில் எமக்கு மன்னிப்பே இல்லை. இதனால் தான் பரிபூரணமாக கிளர்ந்தெழுதல் என்பதை பெரும் பொறுப்பு என்று திலீபன் தனது ஆன்ம அழைப்பில் ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார். இதனை மனதிருத்தி அவர் தன்னிகரில்லாத் தியாகத்தைப் போற்றி அவர் எந்த இலட்சியத்திற்காகத் தன்னுயிர் தந்தாரோ அந்த இலட்சியத்தை நிறைவேற்ற நாம் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழுந்து மக்கள் புரட்சி ஒன்றின் வெற்றிக்கு உழைப்போமாக! ❄

## உங்கள் தொடர்புகட்கு

**AUSTRALIA**
TCC
P O Box 375
Preston
Victoria 3072

**CANADA**
WTM
64 Eaton Avenue
Toronto
Ontario M4J 2Z5

**DENMARK**
LTTE
P.O.Box 47
7400 Herning

**FRANCE**
TCC
341 Rue Des Pyrenees
75020 Paris

**GERMANY**
TCG
Postfach 340251
51624 Gummersbach.

**ITALY**
TCC
Via Mariano Stabile - 49
90139 Palermo

**NETHERLANDS**
TCC
Grt. Hertoginnelaan-106
2517 EL Den Hagg

**NORWAY**
TCC
P.O.BOX 1699 Vika
0110 Oslo

**SWEDEN**
TCC
Glomminge Grand-25 - 3TR
16362 Spanga.

**SWITZERLAND**
WTTC
Joses Str - 110
8005 Zurich

**UNITED KINGDOM**
UTO
Eelam House
202 Long Lane
London SE1 4QB

**U.S.A**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L
,Jamaica
New York 11432.

www.tamilarangam.net



# விதைத்ததைச் சொல்வதில் விருப்பம்! ஆனால் அறுப்பதைச் சொல்வதில் தயக்கம்!!

கிடந்த சில தினங்களுக்குமுன், கண்டிக்குப் போனார் சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் அநுருத்த ரத்வத்தை. கண்டிக் குண்டு வெடிப்போடு, கண்டபடி தலைகாட்ட மறுத்து தலைமறைவான சிங்களத்தின் தற்போதைய 'சண்டியன்' ரத்வத்தை, கண்டிக்குப் போய், தனது கெட்டித்தனத்தை மீண்டும் விண்டுரைத்தார். தலதா மாளிகைக் குண்டு வெடிப்போடும், பொருளாதார நெருக் கடியாலும், தொடரும் யுத்தத் தோல்வியாலும் நொந்து போயிருந்த சிங்களத்தாருக்கு, தென்பூட்டு வதுகணக்காய் சில அரிய கருத்துக்களையும் அமைச்சர் திருவாய் மலர்ந்தார்.

95ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யுத்தத்தை ஆரம்பித்தோம்.. மூன்று வருடத்தில் எத்தனை அரிய வெற்றிகளைச் சந்தித்தோம் தெரியுமா..? என்று கேட்டுவிட்டு, கூடியிருந்தவர்களின் ஆவல்மேவிட அவாவும் முகங்களை நோட்டமிட்டவாறு.... சில கணங்களை செலவழித்த அமைச்சர், யாழ்ப்பாணத்தை பிடித்துவிட்டோம் தெரியுமா...! என்று முஷ்ட்டியை உயர்த்தி முழங்கினார். சனங்கள் ஓங்கிக் கரகோசம் செய்தன. அமைச்சரும் வெற்றிகொண்ட பெருமிதத்தில் மிதந்தார்.



குதிரையில் பவனிவரும் சப்புமல் குமரையாவுக்கு கொழும்பில் அணிவகுப்பு மரியாதை

இது, யாழ் நல்லூர் குண்டுவெடிப்பில், இராணுவ உயர் அதிகாரிகளும், பொலிஸ் உயர் அதிகாரிகளும், யாழ்மேயர் ஆகியோரும் ஒன்றாகப் போய்முடிந்த நாளுக்கு மறுநாள் நடந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி செய்யாத பெரும் காரியங்களை, செய்துமுடித்த வீராப்பு அமைச்சரின் பேச்சில் தெரிந்தது. ஆனால், சிறீலங்கா அரசு சந்திக்கும் பாரிய சவால்களை நெருக்கடிகளை தோல்விகளை, வெளியரங்கமாகச் சொல்வது அமைச்சரின் பொறுப்புக்கு உகந்ததல்லப்போலும். தலதாமாளிகைக் குண்டுவெடிப்புக் குறித்தும், கொழும்பு மத்திய வங்கிக் குண்டுவெடிப்புக் குறித்தும், கொழும்பின் மையநிலைகள் மீது, பொருளாதார உயிர்ப்பிரதேசங்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், உயிர்ப்பலி கொடுக்கும் ஜெயசிக்குறுவின் அவலம் குறித்தும் அமைச்சர் சொல்வது அழகல்லபோலும். யுத்தத்தை தீவுபூராவும் பரவிவிரிய வைத்த கெட்டித்தனமும், யுத்தச் செலவீனம் எகிறிக்குதித்து கழுத்தை நெரிக்கும் வகையில் உயரவைத்த பெருமையும், அப்பாவிச் சிங்கள இளைஞர்களை, தம்து அதிகாரப் பசியின் தமது அகங்காரத்தின் பசளையாக்கிய அருகதையும் நிரம்பப் பெற்ற ரத்வத்தை சந்திரிகா கூட்டின், மறுவளத்தில் விரவிக்கிடக்கின்ற இந்தக் கெட்டித்தனங்களை மக்கள்முன் கொண்டு வருவது, அடுத்ததாக கதிரைக்குக் காத்திருக்கின்ற

ஐக்கிய தேசியக் கட்சியின் வேலை. அதை அவர்கள் செவ்வனே செய்வார்கள் என நம்புவோமாக.

அமைச்சர் ரத்வத்தை, மீண்டும் ஒரு விவகாரத்தை வலியுறுத்திச் சொன்னார். அது விடுதலைப் புலிகள் குறித்தானது. ஜெயசிக்குறுவிற்கு இவ்வருடம் காலக்கெடு வழங்கிய ரத்வத்தை,

விடுதலைப் புலிகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அடுத்த வருடத்தை தேர்தெடுத்துள்ளார். அடுத்த வருடத்திற்குள் விடுதலைப் புலிகளை அழித்தொழித்து, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் அவர் அங்கு வாய்பார்த்திருந்த சுதந்திரக்கட்சி

ஆதர வாளர்களுக்குத் தெரிவித்தார். கரகோசம் வானைப்பிளக்க எழுந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நிலையில், இன்னொரு பிரச்சினை இடிக்கின்றது. அமைச்சர் சொல்வது, விடுதலைப் புலிகளை அழித்து பலவீனப் படுத்திவிட்டே பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதாக. ஆனால் அண்மையில், பி.ரி.ஐ செய்தித் தாபனத்திற்கு பேட்டியளித்த சந்திரிகா அம்மையார் சொன்னது, விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார், ஆனால் மூன்றாம்தரப்பு மத்தியத்துவம் இல்லாமல் என. அமைச்சர் பீரிசோ இரண்டு கருத்துக்கும் இடையில் நகங்கலாக ஏதேதோ கருத்தைக் கொண்டுள்ளார். மிகவும் குழப்பமான நிலையில் சிங்களம் இருப்பதாக இதைக் கருதலாம். அல்லது தந்திரமாக இருக்கலாம். ஒன்றுமாத்திரம் உண்மை. அதாவது, அவர்கள் இயல்பாக இல்லை என்பது.

நல்லூர் குண்டுத் தாக்குதல் நல்ல ஒரு செய்தியைக் காவிவருகின்றது. அதாவது, குடாநாட்டில், எங்கும் எப்போதும், எவ்வகையிலும் சாவு சாத்தியமாகலாம் என்பதை அது சிங்களத்திற்கு சொல்லியிருக்கின்றது. சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றியபின் நடத்தப்பட்ட கச்சிதமான பெரும் தாக்குதலாக இதனைக் கொள்ளலாம். இழப்புக்கள் இன்றி நடத்தப்பட்ட தாக்குதல். பெரும்

தலைகளை அது அள்ளிச் சென்றிருக்கின்றது. தாக்குதலின் நவீனத்துவம். நுட்பம் நுணுக்கம் என்பவை குறித்து சிங்களத்தையே தாக்குதல் வியக்கவைத்துள்ளது. தரையில் குண்டுகளைத் தேடி, சிங்களம் கெடுபிடிகளை மேற்கொள்ள, குண்டு தலையில் வெடித்திருக்கின்றது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு யாரும் உரிமை

> இந்தத் தாக்குதலால், இராணுவத்தை அங்கிருந்து மீளப்பெறமுடியாத பாதுகாப்புச் சிக்கல் சிங்களத்திற்கு ஏற்பட்டுள்ளது. யாழ்குடாவில் இருந்து வரும் இராணுவ அணி, ஒரு கைதரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைக்கு ஏமாற்றம்.

கோரவில்லை என்றபோதும், தமிழீழத் தாய் இதற்கு பெருமையோடு உரிமை கோருகின்றாள். ஆக்கிரமித்து நிற்கின்ற படையினருக்கும், அடிவருடிகளுக்கும், அந்தத்தாய்மடியில் பிறந்த ஒவ்வொரு உயிர்ப்பும், அந்த மண்ணிலே விரிந்து கிடக்கின்ற உயிருள்ள பொருளும் உயிரற்ற பொருளும், சாக்குறித்து எச்சரிக்கை செய்கின்றன. விடுதலையின் மூச்சு, தூணில் இருக்கும் துரும்பிலும் இருக்கும் என்பதை, இந்த நல்லூர் குண்டுவெடிப்பு அவர்களுக்கு புரியவைக்குமா என்பது சந்தேகம்தான். என்றாலும் இதுவே நிஜம். விடுதலை அவாவும் தேசத்து, கூழாங்கல்லும் அதற்கான பணியைச் செய்யும்.

நலலூர் குண்டுத் தாக்குதலானது. ஜெயசிக்குறுவின் தலைவிதியோடும் காரணத்தோடு சம்பந்தப் பட்டிருக்கின்றது. இறுதியாக இராணுவ அதிகாரிகளுக்கும் யாழ்மேயருக்கும் இடையே நடத்த பேச்சுவார்த்தையே அதற்கானதாகக் கூட இருக்கலாம். குடாநாட்டில் இருந்து ஒரு தொகுதி இராணுவத்தினரை மீளப்பெற்று, ஜெயசிக்குறுவை விட்ட இடத்தில் இருந்து முழுமூச்சாய் தொடர்வதென்பது சிங்களத்தின் திட்டம். அந்த இடைவெளியை நிரப்ப, இராணுவப் பயிற்சிபெற்ற பொலிஸாரை நியமிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. இதற்கு ஏதுவாகவே, அன்றைய கூட்டமும் நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. யாழ் குடாநாட்டில், சிவில் நிர்வாகத்தை கொண்டுவரும் முயற்சியில் அரசு நாட்டம் கொண்டிருந்தபோதே, யாழ்மேயர் கொல்லப் பட்டுள்ளார் என, சந்திரிகா அரசாங்கம் அழுகின்றது.

இந்தத் தாக்குதலால், இராணுவத்தை அங்கிருந்து மீளப்பெறமுடியாத பாதுகாப்புச் சிக்கல் சிங்களத்திற்கு ஏற்பட்டுள்ளது. யாழ்குடாவில் இருந்து வரும் இராணுவ அணி, ஒரு கைதரும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கைக்கு ஏமாற்றம். இந்தவருடத்திற்குள் ஜெயசிக்குறுவை முடிப்பதாக அறிவித்த ரத்வத்தைக்கும் இது பெரும் பிரச்சினை.

இதனை முடிவுக்குக் கொண்டுவந்தால்தான் தேர்தல் நடத்தமுடியும் என்ற இக்கட்டான சூழ்நிலை அரசிற்கு. ஆக, சிங்களத்திற்கு பெரும் சிக்கலொன்றை, இந்த நல்லூர் குண்டுத் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.

நல்லூர் குண்டுத் தாக்குதல் குறித்து, ஆத்திரம் மேவிட அம்மையார் விசித்திரமான கருத்தை வெளியிட்டார். நகரபிதாமீது நடத்தப்பட்ட தாக்குதல் மாத்திரமல்ல இது, முழு தமிழ்இனத்தின்மீதும் விழுந்த தாக்குதலாகும் என்றார். அவரது கருத்துப்படி, இது சிவிலியன்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

புளுகுப்பெட்டி, சரத்முனசிங்காவின் இட த்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இராணுவப் பேச்சாளர் கனித் தென்னக்கோனோ, விடுதலைப் புலிகள் நம்பிக்கையீனத்தால் மனந்தளர்ந்து விரக்தியோடு

**— சுப்பு —**

செய்த தாக்குதல் என்கிறார். அம்மையார் சொன்னதுபடி சிவிலியன்கள்மீதுதான் தாக்குதல் நடத்தப்பட்டது என்கிறார் இவரும். பேச்சாளர் மிகுந்த விரக்தியுடன் தெரிவித்த கருத்தாக இதனைக் கொள்ளலாம்.

யாழ் மேயர் சிவிலியன் என்று எடுத்துக் கொண்டாலும், சிறுவயதில் நாம் பாடசாலைகளில் கற்ற கவிதைத்தனமான பாடம் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

*தீயாரோடு பேசவேண்டாம்.*

*தீயாரோடு சேரவேண்டாம்.*

*தீயாரோடு சேர்ந்துண்ணவேண்டாம்.*

*தீயாரோடு இணங்கியிருக்கவேண்டாம்.*

என்ற பொருள்படும் அந்த கவிதைத்தனமான பாடம், யாழ் மேயருக்கு மறந்திருக்க நியாயமில்லை.

இன்னொரு வகையில் பார்த்தால், சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வது போன்ற தோற்றத்தில், இராணுவ நிர்வாகத்திற்கு முண்டுகொடுத்தபடி, இராணுவ ஆக்கிரமிற்கு இராணுவப் பயங்கரவாதத்திற்குத் துணைபோகின்ற இவர்கள் போன்றவர்கள் எல்லாம், சிவிலியன்களே அல்ல என்பது சிவிலியன்களின் கருத்து.

அதற்கு அவர்கள் வேறு பெயர் வைத்திருக்கின்றார்கள்.... ''துரோகிகள்''. ஆக, சந்திரிகாவின் கூற்றுப்படி, இந்த துரோகிக்கு விழுந்த அடி, ஏனைய துரோகிகள்மீதும் விழுந்த அடியாகக் கொள்ளலாம். ❇

தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



எமது மண்ணின்
விடுதலையை நேசிக்காத
எவரும் இம் மண்ணை ஆள
அருகதையற்றவர்கள்.
- திலீபன் -

www.tamilarangam.net



## தமிழ் நேசன் கணனி வலையில் ..........

சிறிலங்காவின் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கியும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்ரியன் எய்ட் [ வன்னியில் செயற்படும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம்] கடும் போசாக்கின்மையும் சுகாதாரச் சீர்கேடுகளும் வன்னியில் தோன்றியுள்ளது என எச்சரித்துள்ளது.

கூஸ்டன் பல்கலைக்கழக சட்ட நிறுவனப் பேராசிரியர் ஜோர்டான் ஜே பாஸ்ட் சட்ட சஞ்சிகை ஒன்றுக்கு எழுதியுள்ள கட்டுரை (Vender built journal of Transactional Law- " The Human Rights to Food, Medicine, and Medical supplies, and Freedom from Arbitary and Inhuman Detention and controls in Sri Lanka ") சிறிலங்காவின் மனித உரிமை நிலைகளைக் கடுமையாகச் சாடுவது மட்டுமல்லாமல் மருந்தையும் மருத்துவ வழங்கல்களையும் தடுப்பது பாரதூரமான போர்க் குற்றம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேராசிரியரின் கருத்துப்படி, உணவையும் மருந்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குப் போகாதவாறு தடுக்கவேண்டும் என்ற எண்ணம் சர்வதேச சட்டத்தின் 3வது பிரிவை மீறுவதாகவும் போர்க் குற்றமாகவும் அமைகிறது. மேலும் அமெரிக்க அரசாங்கத்தின் அரசதிணைக்கள 1997ம் 1998ம் ஆண்டு, நாடுகள் குறித்த அறிக்கைகளை குறிப்பிடும் இவர், 1997ம் ஆண்டு நாட்டு அறிக்கையிலே மருந்து, மருந்து வழங்கல்கள் தொடர்பான போர்க் குற்றங்களும், கொள்கைகளும் காணப்படுவதற்கான அதிர்ச்சி தரும் சான்றுகளை காணக் கூடியதாக இருப்பதாகவும் 1998ல் மேலும் போர்க் குற்றங்களும் கொள்கைகளும் பதிவாகலாம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசாங்கத்தின் யுத்தம் முழுவதிலும் தமிழ்ப் பொதுமக்கள் இலக்காக்கப்படுகின்றனர். இதன் மூலம் அவர்களை பயப்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெறலாம் என்பதே சிறிலங்காவின் நோக்கு. இவ்வகையில் சிறிலங்கா உணவை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது என்பது மேலும் தெளிவாகின்றது.

இதனால் தான் நொம் சொம்ஸ்கி (Noum Chomsky) யை கௌரவத் தலைவராகவும் (Patron) நோபல் லோறேட் அடோல்வ் பெரே எஸ்குவில் (Nobel Laureate Adolfo Perez Esquivel) ஐத் தலைவராகவும் கொண்ட மக்களது உரிமைகளுக்கும் விடுதலைக்குமான சங்கம் (League for the Rights and Liberation of People) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 53வது அமர்வில் சிறிலங்காவில் இன்று காணப்படும் இனஅழிப்பு நோக்கிலான போக்குகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தியது.

ஆவணி 1998 முதல் பட்டினி தம் மேல் திணிக்கப்படுவதற்கு எதிராக வன்னி மக்கள் சாத்வீக ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். சிறிலங்கா அரசாங்கம் இப்பகுதிக்கான உணவு விநியோகத்தை 70வீதத்தால் குறைத்துள்ளது. அனுப்பப்படும் 30 வீத உணவுகளும் மிகப் பழுதடைந்தவையாக, புழுக்களும் பூச்சிகளுமாகக் காணப்படுகின்றன. செப்டெம்பர் 9, 1998 முதல் கிளிநொச்சி வன்னி பகுதிகளில் உள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலு வலகத்திற்கு முன்னால் மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். சிறிலங்கா அரசாங்கம் அவர்களின் வாழ்வுக் கான அடிப்படை மனித உரிமைகளை வன்முறைப்படுத்துகின்றது.

மதிப்பிற்குரிய நீங்கள் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை எடுத்து அப்பாவித் தமிழ் பொதுமக்கள் தொடர்ந்தும் அநியாயமாகச் சாவதைத் தடுக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

## எங்கள் உடன் பிறப்புக்களை....

என வீறு கொண்டெழுந்த புலம்பெயர் தமிழர்கள் குமுறுகின்றனர். இந்த உணர்ச்சியின் வடிவாக புலம்பெயர் தமிழர்கள் தாம் வாழும் உலகத் தலை நகரங்களில் உள்ள சர்வதேச அமைப்புக்களுக்கு முன்பாக சிறிலங்கா தமிழர்களை உணவை ஆயுதமாக்கி கொன்றழிக்க முனையும் கொடிய செயலைத் தடுத்து நிறுத்த உடன் அழுத்தங்களை மேற்கொள்ளுமாறு சாத்வீகப் போரில் குதித்துள்ளனர்.

இந்த சாத்வீகப் போராட்டங்களை தங்கள் சகோதரர்கள் உணவைப் பெறும்வரை தொடர்வதற்கும் புலம்பெயர் தமிழர்கள் உறுதியான திட்டங்கள் தீட்டி வருகின்றனர்.

### இலண்டனில்......

இந்த உலகளாவிய சாத்வீகப் போராட்டங்களின் முதற்கட்டமாக இலண்டன் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு முன்பாக அடையாள சாத்வீகப் போராட்டம் கடந்த 18ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. எதிர்பார்த்ததை விட நான்கு மடங்கில் மக்கள் கூடினமையால் அவர்களை குழுக் குழுவாக அடுத்த சுற்றுக்களில் கலந்து கொள்ளுமாறு கூறிய போராட்ட ஏற்பாட்டாளர்கள் பொது மக்களின் வீதிப்போக்குவரத்து மற்றும் அலுவலகங்களின் சாதாரண அலுவல்களுக்கு தடை ஏற்படுத்தாத வகையில் இக் கவனயீர்ப்பு சாத்வீகப் போராட்டங்களைத் தாம் தொடர உள்ளதாக எடுத்து விளக்கினர். முதல் கட்டப் போராட்டத்தில் சுமார் 50 பேர் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அடுத்த கட்டமாக 25ம் திகதி வெள்ளிக்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் முன்பாகவும் அதற்கு அடுத்த கட்டமாக பிரித்தானியப் பிரதமர் அவர்களின். உத்தியோக பூர்வ வாசஸ்தலமான இலக்கம் 10 டவுனிங் தெருவுக்கு முன்பாக அக்டோபர் 2ம் திகதி வெள்ளிக்கிழமை இப்போராட்டம் இடம்பெற உள்ளது. பின்னர் சுழற்சி முறையில் இம்மூன்று அலுவலகங்கள் முன்பாகவும் தமிழ் மக்கள் உணவைப் பெறும் வரை இப்போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என இப்போராட்டங்களை நடத்த புலம்பெயர் தமிழ் மக்களுக்கு உதவும் தமிழர் மனித உரிமை மையம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பன தெரிவித்துள்ளன.

இத்தகைய சுழற்சி முறைச் சாத்வீகப் போராட்டங்கள் உலகின் மற்றைய தலைநகரங்களிலும் சர்வதேச அமைப்புக்கள் முன்பாகவும் நடைபெற ஒழுங்குகள் புலம்பெயர் தமிழர்களால் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஐ.நா அகதிகள் ஆணையாளருக்கு மனு

இலண்டனில் நடைபெற்ற சாத்வீக கவனயீர்ப்பு போராட்டத்தின் முடிவில் பின்வரும் மனு புலம்பெயர் தமிழர்களால் ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலக இலண்டன் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

'நாங்கள் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் உணவுத் தடை, மருந்துத் தடை, அத்தியாவசியப் பொருட்களுக்கான தடை, விவசாயத்திற்கான பொருட்களுக்கான தடை போன்றவற்றால் அப்பாவித் தமிழ் மக்கள் அடைந்து வரும் சொல்லொணாத் துன்பங்கள் குறித்து ஆழ்ந்த கவலை அடைந்து வருகின்றோம்.

இதனால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா பிரதேசங்களில் வாழும் 650,000 மக்கள் கடும் பாதிப்படைந்துள்ளதாக தகவல்கள் எமக் குத் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் கூட, சிறிலங்கா அரசாங்கம் உணவை ஆயுதமாக பயன்படுத்துவதை உடன் நிறுத்த வேண்டுமெனக் கூறியுள்ளார். 1990 முதல் சிங்கள அரசாங்கம் வன்னித் தமிழ் பகுதிகளுக்கு உணவும் மருந்தும் எடுத்துச் செல்லப்படுவதை தடை செய்துள்ளது. தமிழர் தாயகத்தை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்ததை அடுத்து மற்றைய பகுதிகளில் இருந்து இப்பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கான உணவு நிவாரணத்தை சிறிலங்கா அரசாங்கம் யூலை முதல் தடுத்து நிறுத்தியுள்ளது.

சிறிலங்கா தமிழ் மக்களைப் பட்டினி நிலைக்கு கட்டாயப்படுத்தி தள்ளி வருவதால் ஆயிரக் கணக்கான குழந்தைகளும் பெண்களும் போசாக்கின்மைக்கு உள்ளாகும் பேராபத்துக்குள் சிக்கியுள்ளனர். இது சிறிலங்காவில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதமாக வன்னித் தமிழ் மக்கள் தம்மை சிறிலங்கா பட்டினி போடுவதற்க எதிராக சாத்வீக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். யூலை முதல் சிறிலங்கா தடுத்து நிறுத்தியுள்ள நிவாரணங்களை வழங்குமாறு கோரி பாதிக்கப்பட்டுள்ள உள்ளக இடப்பெயர்வுற்ற மக்கள் உண்ணாவிரதத்திலும் குதித்துள்ளனர். ஆயினும் சிறிலங்கா அரசாங்கம் இவை எல்லாவற்றையும் அலட்சியம் செய்து வருகின்றது.

இதனால் இறுதியாக உங்களிடம் நாங்கள் உங்கள் அழுத்தங்கள் மூலம்

*1. சிறிலங்கா கடந்த எட்டு வருடங்களாக வன்னித் தமிழ் மக்களுக்கு மேல் விதித்துள்ள உணவுத்தடை, மருந்துத் தடை உன்பவற்றை அகற்ற உதவுங்கள்.*

*2. உள்ளக இடப்பெயர்வு அடைந்துள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கு உணவை நீங்கள் வழங்குங்கள்.*

*எனக் கோரி நிற்கின்றோம்.*

## வன்னியில் தொடரும்......

அகதிகள் ஆணையாளர் அலுவலக வளவுக்குள் உண்ணாவிரதம் இருந்த மக்களை அலுவலக அதிகாரிகள் வளவுக்கு வெளியே போராட்டத்தை நடாத்துமாறு கேட்டுக் கொண்டதை ஏற்று மக்கள் அலுவலக வளவுக்கு வெளியே உட்கார்ந்து தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர்.

அவ்வாறே மக்களின் அவசர வேலைகளை கவனிப்பதற்காக வென சிறிலங்கா அரசாங்கத்தின் அலுவலகங்கள் முன்பாக மறியல் போராட்டத்தை நடத்தும் மக்கள் செப்டெம்பர் மாதம் முடியும் வரை அலுவலகங்களை இயங்க அனுமதித்து உள்ளனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச அதிபர்கள், தாங்கள் மக்களின் நிலைமையை எடுத்துக் கூறி உணவுத் தடையை விலக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துவார்கள் என அளித்த வாக்குறுதியின் பேரிலேயே மக்களால் தற்காலிகமாக செப்டெம்பர் வரை இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆயினும் இக் காலகட்டத்தில் மக்களுடைய அவசர தேவைகள் தவிர்ந்த வேறு வேலைகள் நடைபெறக் கூடாது என மக்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை உண்ணா நோன்பிருக்கும் மக்களின் ஆதரவற்ற நிலை குறித்து உடன் கவனம் செலுத்துமாறு சமூக சேவை அமைப்புக்கள் இணைந்து கூட்டாக ஒரு மனு ஒன்றை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளரிடம் கையளித்துள்ளன. கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய மனிதவள அபிவிருத்திச் சபை இயக்குனர் அருட்திரு. இருதய தாஸ், சிறிலங்கா மனிதவள அபிவிருத்திச் சபையைக் கூட, மக்களுக்கு உணவு மருந்து போன்றவற்றை வழங்க சிறிலங்கா அரசாங்கம் தடுத்து வருவதாகக் குறிப்பிட்டு, சிறிலங்கா உணவை ஆயுதமாகப் பயன்படுத்துவதைக் கடுமையாக கண்டித்துள்ளார்.

www.tamilarangam.net



# வலுவற்ற சட்டத்துறையை உருவாக்குவது அரசுதான்

இலங்கையில் அரசிற்கு எதிரான ஆயிரக்கணக்கான மக்களை சிறிலங்காப் படையினர் கொன்று குவித்துள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எவரேனும் குற்றத்திற்கான தண்டனை பெறவில்லை என்ற சர்வதேச சட்ட வல்லுனர்கள் அமையத்தின் குற்றச்சாட்டானது, சிறிலங்கா அரசின் நீதித்துறையின் நம்பகத் தன்மையை கேள்விக் குறியாக்கும் ஒன்றாகும். ஆனால் குற்றச்சாட்டு தவறானது ஒன்றல்ல. முற்றிலும் சரியானது.

சிறிலங்கா அரச படையினர் இனஅழிப்பு என்ற ரீதியில் தொடர்ந்து அரசிற்கு எதிரான கிளர்ச்சியை அடக்குதல் என்ற வகையில் பல்லாயிரக் கணக்கானோரின் மரணத்திற்கு காரணமாகியுள்ளனர். இதில் பால் வேறுபாடோ அன்றி இன வேறுபாடோ இருக்கவில்லை. அதாவது சிறுவர், பெண் என்றோ குழந்தைகள், வயோதிபர் என்றோ அன்றி தமிழர், சிங்களவர் என்று கூட வேறுபாடு இருந்ததில்லை. ஆனால் இப்படு கொலைகளில் ஈடுபட்டவர்களிற்கு தண்டனை வழங்கவில்லை என சிறிலங்காவின் சட்டத்துறையின் மீது தனியாகக் குறை கூறுவது முற்றிலும் ஏற்புடையதல்ல. இது ஒரு வகையில் எய்தவன் இருக்க அம்பை நோவது போன்றதாக இருந்துவிடக்கூடும். ஏனெனில் சிறிலங்காவில் சட்டத்துறையும் நீதித்துறையும் இருக்கின்றவைதான். ஆனால் சுதந்திரமானவையாக இல்லை. அதிகாரங்கள் உள்ளனவையாகவும் இல்லை.

அதாவது சட்டத்துறை மீது அரசாங்கம் வகிக்கும் பங்கானது, குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்குப் பதில், அவர்களிற்கு குற்றத்திலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகவே இருக்கின்றது. இவ்வாறு பாதுகாப்பு அளிக்கும் முயற்சி, குற்றம் புரிய முதலிருந்து குற்றம் செய்த பின்னர் வரை நீடிக்கிறது. அதாவது, குற்றச் செயல்களில் இருந்து ஆயுதப் படையினர் தப்பிக் கொள்வதற்கும் ஆயுதப் படையினர் செய்யும் படுகொலைகளுக்கு அங்கீகாரம் அளிக்கவும் என அரசு சட்டங்களை உருவாக்கி வைத்துள்ளது. இந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்டமும் அதைத் தொடர்ந்து மாதாமாதம் நீடிப்புச் செய்யும் அவசரகாலச் சட்டமும் உள்ளன.

இது ஒருபுறம் இருக்க, ஆயுதப் படையினர் படுகொலைகளையோ அன்றி வேறு குற்றங்களையோ இழைத்துவிட்டால் அரசே அதற்கு காரணம் கூறமுற்படுகின்றது. அதாவது குற்றவாளிகள் தம்மை நியாயப் படுத்துவதற்கு முன்னதாகவே அரசே நியாயப்படுத்த முற்படுகிறது. அதன் பின்னர் அவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகளையும் அரசே தாமதப் படுத்துகின்றது. குற்றவாளிகளுக்கு இவ்வாறாக பாதுகாப்பு அளிப்பது மட்டுமல்லாது, ஆயுதப் படையினருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களும், சட்டத்துறையில் உள்ள இடையூறுகளும் நூற்றுக்கணக்கான அப்பாவிகள் சட்டத்தின் பெயரால் சிறைகளில் வாடவும் சித்திரவதைகளிற்கு உள்ளாகவும் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளது.

இந்த வகையில் சட்டத்துறையை தமது தேவைக்கு ஏற்ற வகையில் அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டிருக்கையில் சட்டத்துறை எவ்வாறு பாதிக்கப்பட்ட வர்களுக்கு நீதி வழங்க முடியும்? அதாவது சட்டத்துறையை இவ்விடத்தில் தனித்துக் குறை கூறுவது பொருத்தப்பாடாக இருக்க முடியுமா? அதாவது, சிறிலங்காவின் சட்டத் துறையும் நீதித்துறையும் பூரண அதிகாரங்கள் கொண்டவையாக இல்லாது அரசாங்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன. அரசாங்கம் தனது தேவைக்கு ஏற்ப சட்டங்களை உருவாக்கியும் பயன்படுத்தியும் வருகின்றது. நீதித் துறையின் பெயரால் அப்பாவி மக்களை அரசாங்கம் சித்திரவதை செய்கின்றது. இதேசமயம் சிறிலங்கா நீதித்துறையில் உள்ளவர்களும் ஒரு நடுநிலையானவர்களாகவும் இனவாதம் அற்றவர்களாகவும் இல்லை.

அவர்களும் ஆட்சியாளர்களைப் போன்றே இனவாதம் உள்ளவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில் சட்டத்துறை மட்டுமல்ல சிறிலங்கா அரசாங்கமுமே இதற்குப் பொறுப்பாகும்.

ஆகையினால் சிறிலங்க ாவின் சட்டத்துறையை தனித்துக் குறை கூறுவதை விட அரசே இதற்கு ஒட்டுமொத்த காரணமாகும். ❁

**படுகொலைகளில் ஈடுபட்டவர்களிற்கு தண்டனை வழங்கவில்லை என சிறிலங்காவின் சட்டத்துறையின் மீது தனியாகக் குறை கூறுவது முற்றிலும் ஏற்புடையதல்ல. ஏனெனில் இக்குற்றங்களிலிருந்து படையினர் தப்பிக் கொள்ள சிறிலங்கா அரசே தனக்கேற்றபடி சட்டங்களை உருவாக்கி வைத்துள்ளது.**

## இந்த நூற்றாண்டு..........

இருந்த 313 இராணுவத்தினரில் சிலர் ஓடித்தப்ப எஞ்சியவர்கள் கொல்லப் பட்டார்கள். விடுதலைப் புலிகள் தரப்பில் 62 போராளிகள் வீரச்சாவு.

1991 யூலை 10 - ஆனையிறவு இராணுவ முகாம் மீது தாக்குதல். உதவிக்கு கடல் மார்க்கமாக வந்த சிங்களப் படையோடு முதல் முறையாக விடுதலைப் புலிகள் மரபு ரீதியான போர். 400க்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 550 போரா்ளிகள் வீரச்சாவு.

1993 யூலை 28 - கோவில்முனை, கொக்குத் தொடுவாய், ஜனகபுர இராணுவ முகாம்கள் விடுதலைப் புலிகளினால் ஏககாலத்தில் தாக்கி அழிக்கப்பட்டன. 46 இராணுவத்தினர் பலி. 31 பேர் படுகாயம். புலிகள் தரப்பில் 10 போராளிகள் வீரச்சாவு.

1993 நவம்பர் 11- பூநகரி நாகதேவன்துறை சிங்கள இராணுவ தளம் மீது தரை-கடல் வழி மூலம் பலமுனைத் தாக்குதல். தளம் நிர்மூலம். இத்தாக்குதல் தளபதி பால்ராஜ், தளபதி சொர்ணம் தலைமையில் நடாத்தப்பட்டது. 650 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 459 போராளிகள் வீரச்சாவு. ஒரு தாங்கி, நான்கு விசைப்படகுகள், ஏராளமான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

1995 யூன் 25- தளபதி சொர்ணம், தளபதி சூசை தலைமையில் மண்டைதீவு இராணுவ முகாம் மூன்று மணித்தியாலங்கள் நீடித்த விடுதலைப் புலிகளின் மும்முனைக் கடல் வழித் தாக்குதலில் அழிக்கப்பட்டது. 90 இராணுவத்தினர் பலி. 41 பேர் காயம். 8 இராணுவத்தினரைக் காணவில்லை.

1995 யூலை 28- மணலாறு சிங்கள இராணுவ முகாம்களான பராக்கிரமபுர, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், ஜெயசிங்கபுர, ஜனகபுர மீது புலிகள் சமகாலத் தாக்குதல். தாக்குதல் நாள் நேரம் எதிரிக்கு முன்னரே தெரிந்து விட்டதால் தாக்குதல் வெற்றியளிக்கவில்லை. இது விடுதலைப் புலிகளின் முதல் இராணுவப் பின்னடைவாகும். 180க்கும் அதிகமான போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

1996 யூலை 18-கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு சிங்கள இராணுவ தளம் மீது விடுதலைப் புலிகள் 'ஓயாத அலைகள்' தாக்குதல். இரண்டு நாள் யுத்தத்தில் தளம் முற்றாக அழிக்கப்பட்டது. முகாமிலிருந்த சிங்களப் படையினரில் 69 இராணுவத்தினர் தவிர ஏனைய 1173 பேர் கொல்லப்பட்டனர். இதைவிட உதவிக்கு வந்த விசேட அதிரடிப் படையைச் சார்ந்த 37 பேர் கொல்லப்பட்டனர். யூலை 19இல் ரணவீர பீரங்கிக் கப்பல் கரும் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டது. இதில் 31 கடற்படையினர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 314 போராளிகள் களப்பலியானார்கள். முல்லைத்தீவு இராணுவத்தளம் மீதான தாக்குதல் தேசியத் தலைவர் பிரபாகரனின் நேரடி வழி நடாத்தலில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இன்று வன்னிப் போர் முனையில் 54,000 இராணுவத்தினரை உள்ளடக்கிய மூன்று படையணிகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் வீரம் செறிந்த அதிரடித் தாக்குதலைத் தொடுத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் கூட கிளிநொச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் விசேட பயிற்சிபெற்ற அணியொன்று எதிர்பாராத விதத்தில் வசமாக விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. இந்த வீரம் செறிந்த தாக்குதலில் 40ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பத்து இராணுவத்தினரின் உடல்கள் கைப் பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் பக்கத்தில் 15 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவை ஒரு கைத் துப்பாக்கியுடன் ஆரம்பித்த விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தின் அசுரத்தனமான பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறதேயொழிய வீழ்ச்சியைக் காட்டவில்லை. அப்படிக் காட்டுவதாக நடுநிலமை இராணுவ ஆய்வாளர்கள் சொல்லமாட்டார்கள். சொல்லவும் இல்லை.

விடுதலைப் புலிகள் பலம் இழந்து விட்டார்கள் என்று சந்திரகாவும் அவரது மதி மந்திரியும் பிரச்சாரம் செய்தாலும் அதனைச் சிங்களவர்களே நம்புகிறார்கள் இல்லை என்பது மட்டுமல்ல தமிழீழம் இரவைப் பகல் தொடர்வதுபோல் நிச்சயம் மலரப் போகின்றது என்ற உண்மையை அவர்கள் உணரத் தலைப்பட்டுள்ளார்கள்.

ஆண்டு கி.பி. 2005. இலங்கைத் தீவு இரண்டு துண்டாக வெட்டப்பட்டு விட்டது. அதில் ஒரு பாதியில் தமிழர்கள் ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கிவிட்டார்கள். அது துரித பொருளாதார வளர்ச்சியடைந்து மிகவும் செழிப்பான நாடாகக் காட்சியளிக்கிறது. அதனைப் பார்க்கிற தென்னிலங்கைச் சிங்கள மக்கள் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி ஆட்சிக் கட்டிலை மாறிமாறி பிடித்த பாரம்பரிய அரசியல் கட்சிகளான சுதந்திரக் கட்சி- ஐ. தே. கட்சி இரண்டின் மீதும் வெறுப்படைந்து மூன்றாவது அணியைத் தேடுகிறார்கள். காமினி பொன்சேகா தாயரிக்க இருந்த 'தீர்ப்பு' என்ற திரைப்படக் கதையின் கருவைத்தான் மெலே தந்துள்ளேன். இந்தப் படத்தை தயாரிக்க தயாரிப்பாளருக்கு பாதுகாப்பு அமைச்சின் ஒத்தாசையும் ஒத்துழைப்பும் தேவை. ஆனால், கதையைப் படித்துப் பார்த்த பாதுகாப்பு அமைச்சு உதவி செய்ய மறுத்துவிட்டது.

திரைப்படம் உருவாகுவதை பாதுகாப்பு அமைச்சு தடைசெய்ய முடியுமேயொழிய, யதார்த்த பூர்வமான தமிழீழம் உருவாகுவதை அதனால் தடுத்துவிட முடியாது. கி.பி. 2005இல் அதாவது அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்ல இந்த நூற்றாண்டு முடியுமுன்னரே தமிழீழம் பிறக்கும்! புதிய வாழ்வு மலரும்!

நன்றி : உலகத்தமிழர்

**தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....**



**நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.- திலீபன் -**

www.tamilarangam.net



# மாரிகாலம் ஜெயசிக்குறுவுக்கு சாதகமாம்(?)

சிறிலங்கா அரசியல்வாதிகள் தாம் யுத்தம் குறித்தும் அதில் வெற்றி குறித்தும் தமது விருப்புக்கு ஏற்ப பேசுகின்றனர் என்றால், இராணுவ அதிகாரிகள் கூட அவ்வாறே கூறுகின்றனர். அவ்வாறு இல்லாவிடில் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வன்னிப் பகுதியில் மழைக்காலம் ஆரம்பித்திருக்கின்றது, இச்சூழ்நிலை மாங்குளத்தை படையினர் கைப்பற்றுவதற்கு வசதியாக இருக்கும் எனத் தெரிவித்திருக்க மாட்டார். ஜெயசிக்குறு நடவடிக்கை இப்போது முடிவுறும், அப்போது முடிவுறும் என அரசியல்வாதிகளே காலக்கெடுகளை அறிவுறுத்தி வந்துள்ளனர். அதன்பின்னர் இராணுவ அதிகாரிகளும் இதனை ஊர்ஜிதம் செய்தும் பேசி வந்துள்ளனர். குறித்த இராணுவ அதிகாரிகளின் உறுதிமொழியைக் கேட்டபின்னர் அரசியல்வாதிகள் தமது காலக் கெடுக்களை கூறியுள்ளவை அன்றி முழுமையாகவே அசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றனரா என்பது வேறு விடயம்.

ஆனால், ஓர் அரசியல்வாதி போன்று இராணுவத் தளபதிகளோ அன்றி அதிகாரிகளோ யுத்தம் குறித்துப் பேச முடியாது: ஏனெனில் அரசியல்வாதிகளை விட களநிலைகளை இராணுவ அதிகாரிகளாலேயே இலகுவில் புரிந்து கொள்ள முடியும். அத்தோடு இராணுவத்தினருக்கு அரசியல் தேவைகளும் இருக்கக் கூடாது. ஆகையினால் அரசியல்வாதிகள் பேசுவது போன்று யுத்தம் குறித்து இராணுவ அதிகாரிகள் எழுந்தவிதமாகப் பேசுவது தவறாகும். ஆனால் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் அவ்வாறே பேசுகின்றனர். ஒரு மேஜர் ஜெனரல், மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கு சாதகமான கால நிலையைக் கொண்டிருக்கும் எனக் கூறியமை அவ்வாறே எண்ண வைக்கின்றது. ஏனெனில் ஒரு மரபுவழி இராணுவம் மாரி காலத்தை, அதுவும் காட்டுப் பிரதேசத்தில் யுத்தத்திற்கு ஏற்றது எனக் கூறியது அவ்வாறே எண்ண வைக்கின்றது.

இதற்கு கடந்தகால உதாரணங்களை மட்டுமன்றி நிகழ்கால நிகழ்வுகளையே உதாரணமாகக் காட்ட முடியும். எடுத்துக் காட்டாக மாரிகாலத்திற்குள் ஜெயசிக்குறு முடிக்கப்பட வேண்டுமென கொழும்பு இராணுவ வட்டாரங்களில் தீவிரம் காட்டி வந்தமையைக் குறிப்பிட முடியும். அதாவது மாரி காலம் ஆரம்பித்தால் பெரும் நெருக்கடிகளை துருப்புக்கள் எதிர்நோக்கும் என அஞ்சப்பட்டு வந்தது. இதற்கு ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் கிடைக்கப்பெற்ற அனுபவமே முன்னுதாரணமாகும். அதாவது ஜெயசிக்குறு துருப்புக்கள் கடந்த மாரி காலத்திற்கு முன்பதாகவே மாங்குளத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தன. ஆனால் மாரிகாலம் இராணுவ நடவடிக்கைகளுக்கு பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது என அன்று இராணுவத் தளபதிகளினால் கூறப்பட்டது. அதற்கு கனரகத் தளபாடங்களை நகர்த்த முடியாது எனவும் துருப்புக்கள் நகர முடியாது இருக்கும் எனவும் காரணம் கூறப்பட்டது.

இந்த நிலையில் தற்போது இராணுவ அதிகாரி ஒருவர் மாரி காலம் யுத்தம் புரிய இராணுவத்திற்கு ஏற்ற காலம் எனக் கூறியது ஆச்சரியமான தொன்றாகவே உள்ளது. கடந்த மாரி காலம் இராணுவத்திற்கு யுத்தம் செய்ய ஏற்றதாக இல்லாதபோது இம்முறை மாரி காலம் எவ்வாறு யுத்தத்திற்கு சாதகமாக இருக்க முடியும். அம் மாரி காலத்தில் மழை பொழியாது வேறு ஏதாவது பொழிவதற்கான வாய்ப்புகள் ஏதாவது உண்டா? இது சிலவேளை, சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஐ.தே.க. ஒத்துழைக்காது போனாலும் புதிய யாப்பை நிறைவேற்றுவதற்கு வைத்துக் கொண்டுள்ள இரகசியத் திட்டம் தன்னிடம் உள்ளது எனக் கூறியது போன்று இருக்கலாம். அதாவது பத்தாவது சார்க் உச்சி மாநாட்டின் பின்னர் பத்திரிகைக்குப் பேட்டியளித்த சந்திரிகா ஐ.தே.க. ஒத்துழைக்காவிட்டால் புதிய அரசியல் யாப்பை நிறைவேற்ற இரகசியத் திட்டம் தன்னிடம் உள்ளது எனக் கூறியது போன்று இருக்கலாம்.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் சரி மாரிகாலத்தில் தமக்கு சாதகமான நிலை உருவாகும் என சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளமை மாரி காலத்தில்கூட சில நடவடிக்கைகளை இராணுவத் தரப்பில் மேற்கொள்ளலாம் என்று எண்ண வைக்கின்றது. அதாவது கோடை காலத்தில் சாத்தியமாகததை மாரியில் சாத்தியமாக்கலாம் என அரசு கருதலாம். ஆனால் மாரியோ கோடையோ யுத்தத்தில் செல்வாக்கு செலுத்தலாம். ஆனால், அவை முற்றாக யுத்தத்தைத் தீர்மானிப்பவையாக இருந்துவிட மாட்டாது. புலிகளே யுத்தத்தை தீரமானிப்பவர்களாக நிச்சயம் இருப்பர். ❋

## இந்து சமுத்திரத்தில்....

அச்சம் மேலிட்டது. நடுக்கடலில் வைத்துச் சுடுவானோ? சுற்றி வளைத்து கூட்டிப் போய் முகாமில் அடைப்பானோ? மன்னார் நீதிமன்ற நீதிவான் முன் நிறுத்துவானோ? அல்லது தங்கள் கப்பலில் யாழப் பாணத்துக்கு அனுப்புவானோ?

எண்ணங்கள் அலையலையாக....

படகு போய்க்கொண்டிருந்தது. தலையை உயர்த்தி எட்டிப் பார்த்தேன். அந்த மின் கம்பங்கள் மறைந்து போயின. இனிப் பயமில்லை. எனக்குள் ஒரு துணிவு பிறந்தது. என்றாலும் மேலே போகக்கூடாது. இன்னும் ஐந்து மணித்தியாலங்கள் ஆகலாம். அதுவரை? இருட்டில் அடைபட்டுக் கிடந்தேன். விடியலை எதிர்பார்த்து மீண்டும் என் மனம் அலை பாய்வதைத் தடுத்தான். எதிரேயிருந்த இளைஞன்.

'ஆழக்கடலெங்கும்சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று. என்ஜின் இரைச்சலை மீறி ஒலித்தது அந்தப் பாட்டு. வன்னி மண்ணில் அடிக்கடி கேட்கும் பாட்டு. இனி எப்போ கேட்க முடியும்?

தம்பி, இந்தப் பாட்டையும் பாடடா. 'பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே...' அவன் பாடினான். மெய்மறந்து செவியுற்றேன்.

ட்றோலர் வேகமடைந்தது. சில வேளை எழுந்து தலையை வெளியே நீட்டிப் பார்த்துக் கொண்டேன். நிமிடங்கள் விழுங்கி மணித்தியாலங்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன.

இருள் மறைகிறது. ஒளி தெரிகிறது. கண்ணுக்கு எட்டிய தொலைவில் மணற் பரப்பும் தெரிகிறது. கரை காணமலே ட்றோலர் நின்றது. பயங்கரமாக மோதியது அலை.

'இறங்குங்க' என்றான் ஓட்டி.

'இடுப்பளவு இருக்குமா?'

'ஆமா இறங்குங்க'

ஒருவர் இறங்கினார். கழுத்தளவு கடல். எட்டிப் பிடித்தார் ட்றோலரில். பாய்ந்து ஏறினார். 'இன்னும் போ' எல்லோரும் ஒரே குரலில் சத்தமிட்டனர்.

'சத்தம் வேண்டாம் சத்தம்...' என்றவன் என்ஜினை இயக்கி விட்டான். சிறிது தூரம் போய் நின்றது ட்றோலர்.

'சரி இறங்குங்க..' நான் முதலில் இறங்கினேன். இடுப்பளவு கடல் 'இன்னும் போ' என்று சொல்லலாமா? ட்றோலர் தரைதட்டி விடுமே.

இறங்கிவிட்டோம். ஒருவரையொருவர் பற்றிக் கொண்டோம். பொதிகளை எடுத்துத் தந்தான் உதவி ஓட்டி. தலையில் சுமந்து கொண்டோம். கடலைத் தாண்டினோம். மணலில் காலை பதித்தோம். நன்றாக விடியவில்லை. வழியில் மணலில் பொதிகளை இறக்கி வைத்து களைப்பாறினோம். போத்தலில் எடுத்து வந்த தண்ணீரைக் குடித்தோம். எழுந்து நடந்தோம். கரையோர 'காவல் நிலையம்' தூரத்தே தெரிந்தது. நடந்தோம்.

'வாங்க வாங்க...வாங்க..' என்றனர் அங்கிருந்த காவலர்.

ஆச்சரியம் அன்பான வரவேற்பு. தேநீர் வந்தது. நெஞ்சம் குளிர்ந்தது. நெத்தலி கலந்த கஞ்சி வந்தது. போதும் போதும்' என்றபோதும் ஊற்றினார்கள். எம்மவர் சிலர் அதை மறுத்தனர். பக்கத்திலிருந்த கடைக்கு கூட்டிப் போய் இட்லியும் வடையும் காப்பியும் சாப்பிட வைத்தனர்.

எங்கள் வருகை பற்றி மேலிடத்துக்கு 'போன் செய்து பேசினர். தொடர்ந்து, பெயர், வயது, ஊர், தேசம், வந்த காரணம் படகின் அடையாளம் ஆகிய விபரம் கேட்டு எழுதிக் கொண்டனர். மண்டபம் முகாமுக்குப் போகும் பேருந்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர். நன்றி கூறிவிடை பெற்றோம். நன்றி மறக்க முடியாத அனுபவம். தொடர்ந்து எங்களை அச்சுறுத்திய தடைகள் காவல் நிலையத்தினரின், கடற்படையினரின் முகாம் அதிகாரிகளின் விசாரணைகள். கேள்விகள் – கெடுபிடிகள் மறக்க முடியாத அனுபவம். நான்கு மணிக்குத் தரப்பட்ட சோறும் சாம்பாரும் வரட்டல் குழம்பும் அடுத்த நாள் கிடைத்த அடையாள அட்டையும் கூட.

செழித்து வளர்ந்திருந்த வேப்ப மரநிழலில் மணல்மீது அமர்ந்து என் கதையைப் பொறுமையுடன் செவிமடுத்து என் ஊரவர், எனக்குமுன்பே வந்தவர்– சுந்தரலிங்கம்–சிறு வெறுப்புணர்வுடன் சொன்னார்.

'நீர் புண்ணியம் செய்தவன்...நாங்கள் வந்து சேர்ந்தது, பகல் 12 மணிக்கு. என்ஜின் வேலை செய்யாமல் எங்கெங்கெல்லாமோ அலைந்து....அழுது குழறி இரண்டு பேர் என்ஜினைத் திருத்தி சரிப்படுத்தி கரை சேர்த்தான்கள்....உச்சி வெய்யில்.... நெஞ்சளவு கடல் கடலலைகளைத் தாண்டினால் மணல் நெருப்பாய் கால்களைப் பொசுக்க காவல்துறையின் கண்களில் பட்டு மீதி, நீர் சொன்னதுபோல...இங்கை வந்தும் ஆறுதல் இல்லை.... வாசலில் தொங்கும் 'போர்ட்' பார்த்தீரா?

'தாயகம் திரும்பியோர் தங்குமிடம்' என்று தாயகமாம் சேய்களாம்.. எல்லாம், வெளிப்பகட்டு எங்களை மதிக்கிறாங்களில்லை....ம்....சரி ஆறுதலாய்க் கதைக்கலாம் எழும்பும்.'

இவர் என்ன சொல்லுகிறார்? அக்கரைக்கு இக்கரை அன்னியமா? குழம்பிய மனத்துடன் நடக்கிறேன். இருப்பிடம் நோக்கி.

கடற்காற்று வேகமாய் வீசுகிறது. அது ஒன்றே ஆறுதல் போதும். 'அதுவும் எங்கள் வன்னி நாட்டின் பக்கம் மன்னார் கரையிலிருந்து வருவதால்...'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'இலங்கை இன்னும் எரிகிறது, இனிய தமிழினம் அழிகிறது'
# மலேசியாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா

மலேசியா கோலாலம்பூரில் உலகத் தமிழர் நிவாரண நிதி சார்பில் செம்பருத்தி வாசகர் வட்ட ஏற்பாட்டில் 'இலங்கை இன்னும் எரிகிறது, இனிய தமிழ் இனம் அழிகிறது' என்ற நூல் கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியீடு கண்டது. நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழு தலைவர் மு.கோவிந்தராஜ் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த உலகத் தமிழர் நிவாரண நிதி சார்பில் அறங்காவலரில் ஒருவரான சிபசுபதி அவர்கள் தலைமையேற்று உரையாற்றினார்.

அவர் தமது உரையில், இன்றைய காலகட்டத்தில் ஈழத் தமிழர்கள் வன்னியில் பாரிய உணவு, மருத்துவ உதவிகளை எதிர்நோக்குகின்றனர். உலகத்தில் இலங்கையில்தான் நம்மக்கள் மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்படுகின்றனர். இனிவரும் காலங்களில் மழைக்காலம் ஆரம்பமாக உள்ளது. குடியிருந்த வீடுகளை இழந்து சொத்து, சுகங்களை இழந்து ஒன்றுமறியாத பச்சிளம் குழந்தைகளும் வயோதிபர்களும் அடர்ந்த காடுகளில் அல்லலபட்டுக்கொண்டு மலேரியா நோயினால் ஆயிரக்கணக்கில் இறக்கக் கூடிய அபாய நிலையில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு உடனடியாக பாரிய உதவி செய்ய வேண்டியுள்ளது. இதற்கு எல்லோரும் முன்வரவேண்டும் என்றார்.

சிறப்புரையாற்றிய வழக்கறிஞர் மதியழகன் அவர்கள், கொசோவோவில், பொஸ்னியாவில் மனித உயிர்கள் அழிக்கப்படும்போது அதற்காக வருந்துகிறோம். இயற்கையின் சீற்றத்தால் வெள்ளப் பேரிடர் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட தென் கொரிய மக்களுக்காக வருந்துகிறோம். அதுபோலவே இலங்கையிலே நம்முடைய சொந்தச் சகோதரங்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்காக மனிதநேயம் கொண்ட நாம் வருந்துகிறோம். இதில் என்ன தவறு இருக்க முடியும்? என்றார்.

நூல் வெளியீட்டுரையை மலேசிய எழுத்தாளர் சங்கத் தலைவரும் மலேசிய நண்பன் பத்திரிகை ஆசிரியருமான திரு.ஆதிகுமணன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தமது உரையில், பத்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் இலங்கையைப் பற்றிப் எழுதியபோது உப்புக்கடலில் ஊறிக்கிடக்கும் முத்துத்தீவு, அது இந்தியாவின் கண்ணீர்த் துளிபோல் இருக்கிறது என்று எழுதினேன். இன்று



இலங்கைத் தீவு உலகம் முழுவதும் வாழுகின்ற தமிழர்களின் கண்ணீர்த் தீவாக இருக்கிறது.

பூமிப்பந்தின் எந்த மூலையிலும் மனித இனத்தின் நியாயமான உரிமைகள் பறிக்கப்பட்டு இந்த இனம் அழிக்கப்படும்போது பாதிப்புற்ற மக்களுக்காக குரல் கொடுக்க, அனுதாபம் காட்ட, கவலைப்பட எல்லா மக்களுக்கும் உரிமை உள்ளது. அந்த வகையில் இலங்கையில் அல்லலுறும் தமிழீழ மக்களுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுங்கள். அத்துடன் எங்களால் இயன்றளவு உதவியைச் செய்யவும் பொறுப்பு இருக்கிறது

## கொங்கோ உள்நாட்டு போர் .......

கிழக்குப் பகுதியில் ருவாண்டாவின் எல்லையினைச் சார்ந்துள்ள பசுமையான மலைப்பிரதேசங்களில குடியமர்ந்தனர்.

எனினும் நீண்டகாலமாக இவர்கள் கொங்கோ நாட்டு மக்களின் வெறுப்புக்குள்ளாகி இருந்ததுடன் பொதுவாக 'வெளிநாட்ட.வர்' என்றும் அழைக்கப்பட்டனர். ருவாண்டாவின் இனப்பிரச்சினையிலும் இவர்கள் தவிர்க்க முடியாதவாறு இழுத்துச் செல்லப்பட்டனர். ருவாண்டாவின் 85 வீதமான ஹிட்டு இனத்தவர் 15 வீதமான டுட்சி இனத்தவரால் ஆளப்பட்டு வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ருவாண்டாவின் வடக்கே இருந்து வந்த இவ் ருட்சி இனத்தவர் பொதுவாக கால் நடைகளுக்குச் சொந்தமானவராக விளங்கினர். நாளடைவில் நிலப் பிரபுக்களாக மாறிய இவர்களுக்குக் கீழ் சுதேச இனத்தவரான ஹிட்டுக்கள் வாழவெண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால், பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இருந்த டுட்சி ஆளுமையை 1959இல் உடைத் தெறிந்த ஹிட்டுக்கள் 1994 இனப் படுகொலைவரை ருவாண்டாவினை ஆட்சி செய்தனர். உகண்டாவின் ஆதரவுடன் டுட்சி கெரில்லாக்கள் ஹிட்ட ஆட்சியைக் கவிழ்த்ததனைத் தொடர்ந்து 2 மில்லியன் ஹிட்டு பொதுமக்களும் இராணுவத்தினரும் உகண்டாவினை விட்டு வெளியேறி கொங்கோவின் கிழக்குப் பகுதியில் பல அகதி முகாம்களை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

அதேசமயம் இவ் அகதி முகாம்களில் இருந்துகொண்டு ருவாண்டாவின் புதிய டுட்சி ஆட்சியாளர்கள் மீது இவர்கள் தாக்குதல்களைத் தொடர்ந்து நடாத்தி வந்தனர். 1996 இறுதியில் 'பான்யமுலங்கே' (கொங்கோ டுட்சியினர்) இன் நில உரிமைகளை மொபுட்டு அரசாங்கம் பறித்தபோது பான்ய முலங்கேயினர் கிளர்ந்தெழுந்தனர். ஹிட்டு முகாம்களைத் தாக்க ருவாண்டா இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொண்டது.

மொபுட்டுவுக்கு எதிரான அமைப்புக்களை விரைவாக ஐக்கியப்படுத்திய ருவாண்டா ஆக்கிரமிப்புப் படை ஒன்றிற்குக் கபிலாவை தலைமை தாங்கச் செய்து ஹிட்டு முகாம்களை உடைத்தெறிவதில் வெற்றி கண்டது. இதனைத் தொர்ந்து 700,000 ஹிட்டு இனத்தவர் ருவாண்டாவிற்குத் திரும்ப 200,000 பேர் உள்ளுர்ப் பகுதிகளுக்கு ஓடிச் சென்று தலைமறைவாகினர்.

ஏழு மாதங்களுக்குள் கபிலா கினசாசாவில் சனாதிபதியாக நியமிக்கப்பட்டார். கபிலா முதலாவது வேலையாகத் தனது நாட்டின் பெயரை சயர் என்பதில் இருந்து சனநாயக கொங்கோ குடியரசு என மாற்றினார்.

நாளடைவில் ருவாண்டா, மற்றும் உகண்டாவில் இருந்து வந்த உத்தரவுகளை நிறைவெற்ற மறுத்ததாலும் கொங்கோவின் எல்லைகளுக்குள் இருந்து கெரில்லா இயக்கங்கள் இயங்குவதைத் தடுக்க முடியாமற் போனதாலும் கபிலாவின் மீது இந்நாடுகளுக்கு அதிருப்தி வளர்ந்தது,

ஹிட்டு கெரில்லாக்கள் தொடர்ந்து எல்லையைக் கடந்து ருவாண்டா மீது தாக்குதல்கள் நடாத்துகின்றனர் என்றும் 1997 வசந்த காலத்தில் இருந்து இற்றைவரை 10000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ருவாண்டா குற்றம் சுமத்துகிறது. இதேசமயம் வடகிழக்கு கொங்கோவில் இருந்து கெரில்லாக்கள் தமது நாடு மீதும் தாக்குதல்கள் நடத்துகின்றனர் என உகண்டாவும் குற்றம் சுமத்துகிறது.

மொபுட்டு போலவே கபிலாவும் இன ரீதியான அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். தனது டுட்சி ஆலொசகர்களைப் பதவி நீக்கம் செய்த கபிலா உறவினர்களையும் தனது 'கடங்கா' இனத்தவரையும் பதவியில் இருத்தினார். இது மட்டுமல்லாமல் யூலை 27இல் ருவாண்டாவின் சகல இராணுவ ஆலோசகர்களையும் கபிலா நாட்டைவிட்டு வெளியேறச் சொன்னார். இதனைத் தொடர்ந்து 5 நாட்களின் பின் கொங்கோவில் உள்நாட்டுப் போர் வெடித்தது.

அநேகமான ஆபிரிக்க நாடுகள் போன்று கொங்கோவும் ஐரொப்பிய காலனித்துவ வாதிகளின் ஒரு செயற்கையான உருவாக்கமாகும். பிரதேச, மொழி மற்றும் இனரீதியாக வேறுபட்டிருந்த கொங்கோவினை பெல்ஜிய மற்றும் பிரான்சிய துருப்புக்களின் உதவியுடன் தனது இரும்புக்கரத்தைக் கொண்டு மொபுட்டு ஒரு தனி நாடாக வைத்திருந்தார். ஆனால், அயல் நாடுகளின் தலையீட்டினாலும் நடைபெறும் உள்நாட்டுப் போரினாலும் கொங்கோ சிறிய அரசுகளாகப் பிரிந்து செல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ❇

தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்.

- திலீபன் -

www.tamilarangam.net



# தியாகி திலீபனின் ஆன்ம கீதம் தமிழருக்கு வாழ்வளிக்கும் வேதம்

**தியாகதீபம் திலீபனின் 11ம் ஆண்டு நினைவாக....**

’நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் நேசமக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச்செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக் கட்டும் மக்கள் அனைவரும் எழுச்சியடைவீர்களாயின், தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்க கூடாது’.

## அவன் வழி பொங்கி எழுந்துள்ள வன்னி மக்கள் உடைத்தெறிவர் சிறிலங்காவின் உணவை ஆயுதமாக்கும் சர்வதேச சட்டமீறலை.



முத்தமிழ் கொஞ்சு நல்லை மண் வரலாற்றுப் பெருமையுடையது. தமிழர்களின் அரசான யாழ்ப்பாண மண்ணின் தலைநகராகத் திகழ்ந்த பூமி. தமிழீழத் தாயகத்தின் நவீன வரலாறு இந்த மண்ணிலிருந்து தான் ஆரம்பமாகிறது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. ஆம். இலங்கைத் தீவில் சிங்கள கரையோர அரசை போர்த்துக்கேயர் கைப்பற்றி 116 ஆண்டுகளின் பின்னரே இறுதி தமிழ் அரசனான சங்கிலி மன்னனை கைப்பற்ற முடிந்தது என்பது தமிழீழத் தாயக வரலாறு. மாற்றானுக்கு மண்டியிடாத அந்த மாமன்னன் சங்கிலியனின் தலைநகராக விளங்கிய அந்த நல்லைநகர் தமிழீழ விடுதலை வரலாற்றிலும் மாபெரும் சரித்திர நிகழ்ச்சி ஒன்றின் நிகழ்களமாக காட்சியளிக்கின்றது. 1987 ம் ஆண்டு செப்டெம்பர் 26ம் நாள் தமிழீழத் தேசத்தின் வரலாற்றில் அதிமுக்கிய நாள். தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்கு மீதான உயிரிலும் மேலான விருப்பை- நீதிக்காக உண்மைக்காக தங்கள் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக உள்ள உறுதியை- தமிழீழத் தாயகத்தை மீளவும் நிறுவுவதற்கு தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் மக்கள் சக்தியாக திரண்டெழுந்து நிற்கும் தன்மையை உலகுக்கு வெளிப்படுத்திய நாள். காலனித்துவத்தின் வழி உருவான நவ காலனித்துவத்தால் திணிக்கப்பட்ட அந்நிய அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பை இனஅழிப்பை மனிதாயத்திற்கு எதிரான செயல்களை எதிர்த்து தாம் உயிர் வாழ்வதற்காகப் போராடப் புறப்பட்ட தமிழீழ மக்கள் தமது உரிமைகளை தாமே போராடிப் பெற வேண்டுமே தவிர யாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது என்ற பேருண்மையை அனுபவமாக உணர்ந்து கொண்ட நாள். வல்லரசுகளும் பிராந்திய வல்லாண்மைகளும் நீதிக்கும் உண்மைக்கும் தலைவணங்குவதில்லை-அவற்றை விற்பதற்காகத் தம்மிடையே தோன்றிய பெரியவர்களின் சிந்தனைகளைக் கூட தாமே மழுங்கடிப்பர் என்ற மகத்தான உண்மைக்கு உதாரணமாக காந்தியின் அகிம்சையை காந்தியின் தேசமே கழுவேற்றிய நாள். இந்த வரலாற்று உண்மைகள் மீண்டும் வெளிவந்து அமைதிப்படையாக வந்தவர்கள் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பர் என்று மக்களிடை வரலாற்றுப் பார்வையற்ற தமிழ் சுயநல அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட கருத்துக் குழப்பங்களால் விடுதலைப் போராட்டத்தின் வேகம் வீறு மந்தப்பட்டிருந்த நேரத்தில் தன் உயிரை தன் வாழ்வை சத்தியத்தில் கரைத்து மக்களை வீறு கொண்டெழ வைக்க ஒரு மனித ஆன்மா தன் தியாகத்தால் தேசத்தின் ஆன்மாவாக பிறப்பெடுத்த புனிதமான நாள்

## பரிபூரணமாக கிளர்ந்தெழுங்கள் என்ற திலீபன் அழைப்புக்கு எங்கு எப்படி வாழ்ந்தாலும் பதில் சொல்லல் நம் ஒவ்வொருவரதும் பெரும் பொறுப்பு. அதுவே தன்னிகரற்ற அவனின் தியாகத்திற்கு நாம் செய்யக் கூடிய ஒரே கைமாறு.

இந்த செப்டெம்பர் 26 ம் நாள்.

ஆம். தியாக தீபம் திலீபன் 1987 ல் அகிம்சை வழியில் ஐந்து அம்ச கோரிக்கைக்காக உண்ணா



நோன்பிருந்து உயிர் நீத்த புனித தினம் இந்த செப்டெம்பர் 26ம் நாள். திலீபனின் நினைவு குறித்து நம் தேசத் தலைவர் பிரபாகரன்:-

’ திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைகளுக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த- உன்னத-தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கின்றான்’

எனக் கூறியுள்ள வரிகள் மிக ஆழமாக சிந்திக்கப்பட வேண்டியவை.

அந்தப் புனித் ஆன்மாவின் இறுதிப் பேச்சு காதுகளுள் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது :-

’அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய அன்பான தமிழீழ மக்களே அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்!

நிற்க வலுவில்லை. இருந்து கொண்டே பேசுகின்றேன். நாளை நான் சுய உணர்வோடு

====>>>>

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருப்பேனோ தெரியாது. அதனால் தான் உங்களுடன் பேச வேண்டுமென விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் மிக உறுதியாக இருக்கின்றோம். ஏற்கனவே அறுநூற்று ஐம்பது பேர் இலட்சியத்திற்காக மரணித்து விட்டனர்.

மில்லரைக் கடைசியாகச் சந்தித்த பொழுது என்னிடம் ஒரு வரியைக் கூறினான். 'நான் எனது

தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்கப் போவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் ஒரே ஒரு ஏக்கம். எனது மக்கள் விடுதலையாகும் காட்சியை என்னால் காணமுடியாமல் போகிறதே' எனக் கூறிவிட்டு வெடிமருந்து வாகனத்தில் ஏறிச் சென்றான். எனக்கு முன் சென்ற அறுநூற்றைம்பது பேரும் எனக்குத் தெரியவே இறந்தார்கள். அவர்கள் எதற்காக மரணித்தார்கள் என்பதை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாகத் தலை வரிடம் அனுமதி கோரிய போது, 'திலீபன் நீ முன்னால் போ! நான் பின்னால் வருகிறேன்' எனக்கூறி எனக்கு உற்சாகமூட்டினார். அவ்வளவு தூரம் தெளிவான தலைவர் தான் - தனது உயிரையும் சிறிதும் மதியாத தலைவர் தான் எங்களுக்கு கிடைத்துள்ளார். நான் தலைவரிடம் குறைவான நேரமே இப்போது இருந்துள்ளேன். இப்போது விளங்குகிறது எனக்கு என் தலைவரின் கொள்கைப் பிடிப்பு.

தாய்மார்களே! பெரும் வீரனின் தலைமையில் நீங்கள் கிளம்புங்கள்! ஒரு மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நாங்கள் நிச்சயமாகத் தமிழீழம் காண்போம். நான் அதை வானிலிருந்து என் அறுநூற்றைம்பது தோழர்களுடன் சேர்ந்து பார்ப்பேன். என் ஆத்மரீதியாக நான் அதை உணர்கிறேன். என் மக்கள் நிச்சயம் தமிழீழம் காண்பார்கள்.

எனது மக்களின் விடிவுக்காக, நான் பூரண திருப்தியுடன் இந்த உண்ணாவிரதத்தில் இறங்கினேன், எனக் கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமது உயிரிலும் மேலாக இங்குள்ள மக்களை நினைக்கின்றார்கள். தெளிவான உறுதியான இலட்சியத்துடன் இருக்கின்றார்கள். எனது இறுதி இலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது இறுதி ஆசை. வணக்கம்'.

திலீபனின் இந்த இறுதி ஆசையை நிறைவேற்ற உழைக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு. அதற்கான வழியாகத் திலீபன் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஒன்று, தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையேல் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகி விடும் என்னும் எச்சரிப்பு. அடுத்தது 'நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் நேசமக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச்செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும், மக்கள் அனைவரும் எழுச்சியடை வீர்களாயின், தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்க கூடாது' என்ற அனுபவ மொழி.

இந்த இரண்டையும் தமிழீழ மக்கள் தியாகி திலீபனின் ஆன்மகீதமாக தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்கும் வேதமாக கருதுகின்றனர். அதனால் தான் இன்று, உணவை ஆயுதமாக்கி சர்வதேச சட்டங்களை மீறித் தம்மை பட்டினிச் சாவால் இனஅழிப்புச் செய்ய முயலும் சிறிலங்காவின் கொடுஞ் செயலை எதிர்த்துப் போராடவும் சர்வதேச நிறுவனங்களின் அலட்சியப் போக்கை எடுத்துக்காட்டி உதவும்படி கோரவும் திலீபனின் அதே சாத்வீக ஆயுதத்தை ஏந்தி வன்னியில் உண்ணாவிரத போராட்டத்தில் பரிபூரணமாக கிளர்ந்தெழுந்துள்ளனர். இது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்னும் மக்கள் புரட்சியின் ஒரு அங்கம். இந்த மக்கள் புரட்சியின் வெற்றி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்த சிறிலங்கா மக்களைப் பட்டினி போட்டு அவர்களின் போராட்டத்தினை நசுக்க கங்கணம் கட்டி நிற்கின்றது. உணவை ஆயுதமாகப் பயன் படுத்தும் சிறிலங்காவின் இந்த இனஅழிப்புச் செயலை தடுப்பதற்கு சர்வதேச நாடுகளும்




அமைப்புக்களும் பொறுப்பு வாய்ந்தனவாக உள்ளன. மக்கள் நலனில் அக்கறை காட்டும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அவர்கள் உயிர் வாழ்தலுக்கு உரிய உணவை மருந்தைப் பெற்றுக் கொடுக்கத் தவறினால் அவைகளின் செயல்பாடுகளில் மக்கள் நம்பிக்கையற்றவர்களாகி விடுவர்.

இந்த உண்மையை வன்னிச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதே வேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச சமுகம் உதவ மறுப்பது ஆக்கிரமிப்பாளனுக்கு உற்சாகம் ஊட்டும் செயலாகி ஆக்கிரமிப்பாளன் மேலும் மேலும் இன அழிப்புக் குற்றத்தை எவ்வித அச்சமும் இன்றி மேற்கொள்ள வழி வகுக்கும்.

இந்த உண்மை களை உலகுக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் எடுத்து விளக்கி எம் மக்கள் உயிர் வாழ எம் தேச அமைதி மீள நாம் திலீபனின் பாதையிலே பரிபூரணமாகக் கிளர்ந்தெழுவோமாக! ❁

**மருந்தை உணவை எம் மக்கள் நாவில் கூட படாது தடுக்கும் சிறிலங்காவின் சதிச் செயலை முறியடிக்க கிளர்ந்தெழுந்தெழுவோம்.**

## அவனி துடித்தது

அன்னம் தண்ணி ஏதுமின்றி
அண்ணன் இருந்தான்
அன்னை மண்ணில் காதல்
கொண்டு
தன்னை மறந்தான்

ஊரழுத போதினிலும்
உண்ண மறந்தான்
ஊரெழுவில் பிறந்த
மைந்தன்
உயிர் துறந்தான்

தேசத்தை மீட்டிடவே
பசித்தீயில்
குதித்தான் - மாற்றான்
வேசத்தை கலைத்திடவே -
ஒரு
வேள்வி தொடுத்தான்

மேகத்தை பிளந்து - ஒரு
மின்னல் பிறந்தது -
மாற்றான் ஆதிக்க
மோகத்தை உடைத்து -
ஒரு
பிள்ளை இறந்தது

பார்த்திருந்த வேளையிலே
பஞ்சாகினான் - அண்ணன்
பாரதத்தின் சதியினாலே
சருகாகினான்

அணுவணுவாய் அவன்
சாக
அவனி துடித்தது
ஈழத்தாய் மடியில் அவன்
சாய
எம் நெஞ்சு வெடித்தது.

*- ச. அதிரதன்*

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட்

## 14



மார்ஷல் சுய்க்கோவ்

சிறு பீரங்கிகளும், டாங்கி எதிர்ப்பு தற்காப்பிற்காகப் பயன்படுத்த வேண்டிய ரெஜிமென்டு பீரங்கி களும், கட்டிடங்கள், ஜன்னல்கள், கதவுகள், பரண்கள், கூரைகள் ஆகியவற்றை நோக்கி நேரடியாகச் சுட வெற்றிகரமாகப் பயன் படுத்தப்பட்டன. சிதறும் கன வெடி குண்டுகள் ஆட்களுக்கெதிராக பெரிதும் அபாயமானவைகளாக இருந்தன. 45 மி.மீ. கவச எறிகுண்டுகள் கட்டிடங்களினுள் இருந்த எதிரியின் சாரண அரண்களை அழித்தன.

வோல்காவின் வலது கரையில், நகரத்தில் இருந்த பீரங்கிகளில் கணிசமான பகுதி, இடையறா வான் குண்டு வீச்சுகளாலும், எதிரியின் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் பல்வேறு திசைகளிலிருந்தும் சுட்டதாலும் விரைவாகப் பழுத டைந்து கொண்டிருந்தன. எல்லா இடங்களிலும் எப்போதும் பீரங்கிகள் தேவைப்பட்ட போதிலும் ஸ்டாலின் கிராட்டில் ஒரு ராக்கெட் பீரங்கி ரெஜிமென்டை (தட்டைச் சக்கர ங்களுடன் கூடிய 82 மி.மீ. மார்டர் பீரங்கிகள்) சேம இருப்பில் வைத்திருந்தோம். இதை யாருக்கும் கீழ்ப்படுத்தாமல், எப்பிரிவிலும் சேர்க்காமல் வைத்திருந்தோம். இதுபலமுறை பாசிஸ்டுத் தாக்கு தல்களைத் தடுத்து நிறுத்த



நெருக்கடியான நேரங்களில் கைகொடுத்தது.

படைத்தலைமையின் முடிவுப்படி டிவிசன்களின் தொலைதூரப் பீரங்கிப் பிரிவு இடது கரையில் தங்கியிருந்தது. அங்கே பீரங்கி களை எளிதாக அங்குமிங்குமாக நகர்த்த முடிந்தது.

குண்டுகளை எடுத்துச் செல்வதும் (ஆற்றைக் கடக்காமல்) இலகுவாக இருந்தது.

ஸ்டாலின்கிராட்டில் டாங்கிப் பிரிவுகளும் தலைமையகங்களும் ஏராளமாக இருந்த போதிலும் டாங்கிகள் குறைவாகவே இருந்தன. ஏனெனில், நகரச் சூழ்நிலையில் பெருமளவில் டாங்கிகளை எங்க ளால் பயன்படுத்த இயலவில்லை. மேலும், இவற்றை வோல்காவின் மறுகரையிலிருந்து கொண்டு வருவதற்கான வாய்ப்புகளும் எங்களுக்கு இருக்கவில்லை.

ஆனால், படையிலிருந்த டாங்கி களை நாங்கள் முழுமையாக - உடைந்துபோன டாங்கிகளை இருந்த இடத்திலிருந்தே சுடும் சாதனங்களாகவும், தப்பிப் பிழைத் தவற்றை எதிர்த்தாக்குதலுக்கான முக்கிய தாக்குதல் சக்திகளாகவும் - பயன்படுத்தினோம். டாங்கி வரக் கூடிய திசைகளில் அவைதான் டாங்கி எதிர்ப்பு தற்காப்பின் அடிப்படையாக இருந்தன. இவற் றைத் தற்காப்பின் முன்ன ணியிலிருந்து - 200-300 மீட்டர் தொலைவில் நிறுத்தி, நன்கு மூடி, கோபுரப் பகுதி வரை மறைத்து, இவற்றிற்குக் காலாட்படை பாதுகாப்பை ஏற்பாடு செய்தோம். இக்காலாட்படையினர் பூமியடி யிலோ, கட்டிடங்களிலோ மறைந் திருந்தனர்.

இருந்த இடத்தில் மறைவாக இருந்தபடியே, தெருக்கள், சதுக் கங்களில் பெருமளவு வந்த எதிரி டாங்கிகள் மீது எங்கள் டாங்கிகள் சுட்டது பெரிதும் பயன்மிக்க தாயிருந்தது.

செப்டம்பர் 14, 15இல் வந்த வேகத்திலேயே நகரத்தினுள் புக முயன்ற பெரும் பாசிச டாங்கிகளை இப்படித்தான் தடுத்து நிறுத்த முடிந்தது. மறைந்திருந்த டாங்கிகள் இவற்றை நோக்கிக் கடுமையாகச் சுட்டதில் எதிரி டாங்கிகள் பேரிழப்பையடைந்து பின்வாங்கின.

அந்நாட்களில், கர்னல் கிரிச்மன் லெப்டினன்ட் கர்னல் உதவிச் சேன்கோ ஆகியோரின் டாங்கி பிரிகேடுகள் - இவற்றில் 30 ரீ-34 ரக டாங்கிகளும் இரண்டு டாங்கி எதிர்ப்பு ரெஜிமென்டுகளும் இருந்தன. பாதுகாத்த இடத்தின் மீது மட்டும் பாசிஸ்டுகள் 400க்கும் மேற்பட்ட பல்வேறு டாங்கிகளை ஏவினர். ஆனால், பாசிஸ்டுகளிடம் அதிக எண்ணிக்கையில் டாங்கிகள் இருந்தும் அவர்களால் எங்களு டைய தற்காப்பைப் பிளந்து வோல்காவை அடைய முடியவில்லை.

எனவேதான், செப்டெம்பர் இறு தியிலிருந்து பாசிஸ்டுகள் ஏராளமான டாங்கிகளைக் கொண்டு தாக்குதல் தொடுப்பதைக் கைவிட்டு, காலாட்படையோடு சேர்த்தோ, விமானங்கள், பீரங்கிகளின் ஆதர வோடு சிறு சிறு குழுக்களாகவோ இவற்றை சண்டையில் இறங்கினர். ஸ்ராலின்கிராட்டைக் காத்து நின்றவர்கள் இவற்றை வெற்றி கரமாக சமாளித்தனர்.

உதாரணமாக, செப்டெம்பர் 19 ஆம் தேதி 102.0 என்ற இடத்தை (மமாயெவ் குன்று) பிடிக்க முயலும் முகமாக ஜேர்மானிய டாங்கிகள் 10-15 டாங்கிகளாக ஒன்று சேர்ந்து வடக்கு, மேற்கு, தெற்குத் திசைகளிலிருந்து தாக்கின. தாக்குதலில் மொத்தமாக 40க்கும் மேற்பட்ட டாங்கிகள் பங்கேற்றன. இங்கே எங்களுக்கோ ஐந்து ரீ-34 ரக டாங்கிகளும் மூன்று ரீ-60 ரக டாங்கிகளும் மட்டுமே இருந்தன.

சார்ஜன்ட் மேஜர் ஸ்மெஹத்வோரவ் தலைமையிலிருந்த டாங்கி தென் மேற்குச் சரிவில் முதலாவதாக சண்டையில் இறங்கியது. அவர் சுட்ட உடனேயே அவருடைய டாங்கி மீது பாசிஸ்டுகள் சகலவித பீரங்கிகளிலிருந்தும் குண்டுமழை பொழிந்தன. ஒரு எதிரி குண்டு ஸ்மெஹத்வோராவின் டாங்கிக்கு 5 மீட்டர் முன் வெடித்தது. என்றாலும் சோவியத் டாங்கி வீரர்கள் நிலை குலையவில்லை. ஸ்மெஹத் வோரவ் இரண்டாவது முறை சுட்டபோது அது பாசிச டாங்கி மீது விழுந்தது. இன்னுமொரு முறை அவர் சுட, இரண்டாவது டாங்கி புகையத் தொடங்கியது. அதிலிரு ந்து வெளிவந்த எதிரி டாங்கிஸ்டுகள் எங்களுடைய இயந்திர பீரங்கி வீரர்களுக்கு நல்ல இலக்காயினர். அதன் பின் மற்ற பாசிச டாங்கிகள் பின்திரும்பின, எதிரி காலாட்படையோ டாங்கிகள் இல்லாமல் முன்னேறவில்லை.

நகரச் சண்டைகளிலிருந்து இன்னு மொரு உதாரணம்.

ரேஸ்புப்லிக்கான்ஸ்கயா சாலையும் கீவ் சாலையும் சந்திக்கும் மூலையிலிருந்த தனிப்பட்ட சில கட்டிடங்களினுள் தானியங்கித் துப்பாக்கியேந்திய பாசிஸ்டுகள் புகுந்திருந்தனர். இவர்களை ஒழித்துக் கட்டுமாறு உதவிச் சேன்கோ பிரிகேடைச் சேர்ந்த ஒரு யூனிட்டிற்குக் கட்டளையிடப் பட்டது. இதில், 3 டாங்கிகளும் ஒரு துப்பாக்கிப்படை பிளாட்டூனும் (18 வீரர்கள்) இருந்தன. டாங்கி பிளாட்டூனின் கமான்டர் லெப்டி னன்ட் மரோஸவ் இச்சண்டைக்குத் தலைமை தாங்கினார். அவர் எதிரி பார்க்காதவாறு, மமாயெவ் குன்றின் கிழக்குச் சரிவிலிருந்து தன் டாங்கிகளை அகற்றி, அவற்றில் துப்பாக்கிப்படை வீரர்களை ஏற்றிக் கொண்டு, சுமார் 800 மீட்டர் தொலைவிலிருந்து இவ்வீடுகளை நோக்கி டாங்கிகளை வேகமாகச் செலுத்தினார். துப்பாக்கிப் படை வீரர்கள் இவ்வீடுகளின் மீது சுட்டனர். டாங்கிகள் இவ்வீடுகளை நெருங்கியதும் எங்களுடைய துப்பாக்கிப்படை வீரர்கள் டாங்கிக ளிலிருந்து குதித்து, பாய்ந்து சென்று அவ்வீடுகள் அனைத்தையும் பிடித்து, அங்கிருந்த பாசிஸ்டுகளை முழுமையாக ஒழித்துக் கட்டினர்.

இப்பணியை முடித்தபின், கிராஸ்னி அக்தியாபர் குடியிருப்பின் மேற்குக் கோடிக்கு டாங்கிகளுடன் செல்லு மாறு மரோஸவிற்கு கட்டளை யிடப்பட்டது. அங்கே எதிரியின் அடுத்த தாக்குதல் எதிர்பார்க்கப் பட்டது.

இப்படியாக எங்களுடைய டாங்கி கள் தொழிற்சாலைக் குடியிருப்பின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு ஒரு நாளில் பன்முறை இடம்மாறின.

செப்டெம்பர் 27ஆம் தேதி சிலிகேட்டுத் தொழிற்சாலைக்கு எதிராக பாசிஸ்டுகள் சுமார் 2 பட்டாலியன் காலாட்படையினரையும் 16 டாங்கிகளையும் அனுப்பினர். கர்னல் கிரிச்மன் தலைமையிலான கார்டு டாங்கி வீரர்கள் தொழிற் சாலையைப் பாதுகாத்தனர். இத்தாக்குதலுக்கு முன் பாசிஸ்டுகள் தொழிற்சாலையின் மீது பலத்த விமான தாக்குதலைத் தொடுத்தனர். விமான குண்டுவீச்சிற்குப் பின் எங்களுடைய டாங்கி வீரர்கள் டாங்கிகளின் அருகே புகை டிஸ்க்குகளை எரித்து புகை எழுப்பினர். இந்தத் தந்திரத்தைப் புரிந்துகொள்ளாத பாசிஸ்டுகள், எங்களுடைய டாங்கிகள்தான் எரிகின்றன என்று முடிவு செய்து தாக்குதலில் இறங்கினர். அவர் களை நெருங்கி வரவிட்டு, பின் எங்களுடைய டாங்கி வீரர்களும் பீரங்கி வீரர்களும் நேரடியாகச் சுட்டதில் 11 எதிரி டாங்கிகள் அழிக்கப்பட்டன.

எங்களுடைய பழுதடைந்த டாங்கிகள் விரைவாகச் சரி பார்க்கப்பட்டு மீண்டும் சண்டை யில் இறக்கப்பட்டன. டிராக்டர் தொழிற் சாலையின் தொழி லாளர்கள், குறிப்பாக 5வது பிரிவின் தொழிலாளர்கள் எங்க ளுக்குப் பெரிதும் உதவினர்.

தொடரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்த நூற்றாண்டு முடியுமுன்னரே தமிழீழம் பிறக்கும்!

ஆடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும் என்று சொன்னவன் கதைமாதிரி எத்தனை எத்தனை தோல்விகளை சிங்கள இராணுவம் வன்னிப் போர்க்களத்தில் சந்தித்தாலும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஓயப் போவதில்லை என்றும், வவுனியா-கிளிநொச்சிப் பாதையை என்ன பாடுபட்டும் திறந்தே தீருவதென மின்சக்தி-நீர்ப்பாசன அமைச்சரும் துணைப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தை சூளுரைத்துள்ளார்.

பொங்கல், புதுவருடம் என்று கெடுவுக்கு மேல் கெடு வைத்துக் களைத்துப் போன ரத்வத்தை இப்போது புதிதாக இந்த ஆண்டு நவம்பர் மாதக் கடைசிக்குள் கிளிநொச்சியைக் கைப்பற்றி விடப்போவதாக அறிவித்துள்ளார்.

இதற்காக புதிதாக பல ஆயிரம் கோடி ரூபா செலவில் நவீன ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள், உபகரணங்கள், தாங்கிகள், உலங்குவானூர்திகள் சீனா, இஸ்ரேல் உருசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

1998ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 4,400 கோடி ரூபாவாகும். (663. 3 மில்லியன் டொலர்) 1 அமெரிக்க டொலர் ரூபா 66. 33. ஆனால், இப்போது இது போதாதென்று மேலும் 800 கோடி ரூபாவை (செலவில் 18 விழுக்காடு உயர்வு) நிதியமைச்சு பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கியுள்ளது. எனவே, நடப்பு ஆண்டு பாதுகாப்புச் செலவீனம் 5, 200 கோடி ரூபாவை எட்டியுள்ளது. இந்தத் தொகை முன்னைய ஆண்டைவிட 540 கோடி ரூபா (1997 - ரூபா 4,660 கோடி) அதிகமாகும்.

இதனால் வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு 15 விழுக்காட்டில் இருந்து 20 விழுக்காடாக அதிகரித்துள்ளது. அதாவது ஒரு ரூபாவில் 20 சதத்தை பாதுகாப்பு அமைச்சு விழுங்கி விடுகிறது.

இப்போது பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள 800 கோடி ரூபா வரவு-செலவுத்திட்டத்தில் துண்டு விழும் 6.5 விழுக்காடு பற்றாக்குறையை அதிகரிக்காதென துணை நிதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் அறிவித்திருக்கிறார். காரணம் பாதுகாப்பு அமைச்சின் பாதிச் செலவை தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து பெறப்படுவதாக அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு அரச-மற்றும் தனிப்பட்ட ஊழியர்களிடம் இருந்து கட்டாயமாக அவர்களது வருமானத்தில் 4. 5 விழுக்காடு அறவிடப்படுவது தெரிந்ததே. ஆரம்பத்தில் 0.5 விழுக்காடாக இருந்த இந்த விகிதம் பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டது. இந்த நிதிக்கு மத்திய கிழக்கு மற்றும் வெளிநாட்டில் வாழும் சிங்களவர்கள் தாராளமாக உதவி செய்து வருகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை சந்திரிகா அரசின் எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாக வன்னியில் புதையுண்டு கிடப்பதும், மேலே குறிப்பிட்டது போல் யுத்தத்திற்கு மேலும் பெருமளவு நவீன இராணுவ தளபாடங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருந்ததும் பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிகமாக 800 கோடி ரூபா ஒதுக்கப்படுவதற்கு ஒரு காரணமாகும். மற்றைய காரணம் ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட-ஏற்பட்டு வரும் வீழ்ச்சியாகும். இந்த ஆண்டில் மட்டும் ரூபாவின் பெறுமதி 12.5 விழுக்காடு வீழ்ச்சியுற்றுள்ளது. கடந்த சில வாரமாக இந்த

## புதிய வாழ்வு மலரும்!

வீழ்ச்சியின் வேகம் மேலும் அதிகரித்துள்ளது.

இதே சமயம் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி சந்திரிகா அரசு தென்னிலங்கை மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திபோட்டுள்ளது.

இந்தத் தேர்தலை ஒத்திப் போட வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தவர் துணைப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் 96 விழுக்காடு வெற்றிகரமாக முடிந்துவிட்டது, அவர்களை இராணுவ ரீதியாகப் பலவீனப் படுத்திவிட்டோம், இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள் படையணிகளின் ஒரு பகுதியை வன்னிப் போர்க்களத்திலிருந்து மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்புக்கு இடம் மாற்றம் செய்வது ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை பாதிக்கும் என்றும் அப்படிப் பாதிக்கப்பட்டால் அதற்குத்தான் பொறுப்பல்ல என்றும் ரத்வத்தை சனாதிபதி சந்திரிகாவிற்கு மிரட்டல் கலந்த ஆலோசனையை வழங்கியிருந்தார்.

சிறிலங்காவின் அடுத்த பிரதமராக அனுருத்த ரத்வத்தையை இனம் காட்டிவரும் கண்டி மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பௌத்தமத பீடாதிபதிகள் இந்த ஆலொசனை வழிமொழிவதுபோல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடியும் வரை மாகாண சபைத் தேர்தலை ஒத்திப் போட வேண்டும் என்று சந்திரிகா அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு விடுதலைப் புலிகளது பல்வீனத்தையும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தொடர வேண்டிய கட்டாயத்தையும் காரணம் காட்டிய சந்திரிகா அரசு, அதேசமயம் மலையகப் பகுதியில் விடுதலைப் புலிகள் பெருமளவு ஊடுருவிவிட்டதாகவும் அதனால், அங்கு தேர்தலை நடாத்த முடியாமலிருப்பதாகவும் காரணம் சொல்லியுள்ளது. இதில் இருக்கும் முரண்பாட்டை-அதாவது ஒருபுறம் விடுதலைப் புலிகள் பலவீனமாகிவிட்டார்கள் என்றும் சொல்லிக்கொண்டு மறுபுறம் மலையகத்தில் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஊடுருவி தேர்தல் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருக்கிறார்கள் என்று சொல்வது - அரசுகண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகப் பலவீனப்பட்டுவிட்டார்கள் என்பது பழைய கதை. மாறிமாறி ஆட்சிக் கதிரையைப் பிடித்த சிங்களக் கட்சிகளும் அதன் தலைவர்களும்-மறைந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாசா முதற்கொண்டு இன்றைய சனாதிபதி சந்திரிகா ஈறாகச் சொல்லிவரும் புளித்த கதையாகும்.

கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக இந்தப் பல்லவி - இல்லை முகாரி - ஆட்சியாளர்களால் பாடப்பட்டு வருகிறது.

1979ஆம் ஆண்டு யூலை மாதம் 11ஆம் நாள் வட-கிழக்கு மாகாணங்களுக்கு அவசரகாலத்தை பிரகடனப்படுத்திய சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது மருமகனும் சிறிலங்கா இராணுவப் படைத்தளபதிகளில் ஒருவருமான பிரிகேடியர் வீரதுங்காவுக்கு நாசி ஜேர்மனியின் ஆட்சித் தலைவர் கிட்லரின் பாணியில் ஒரு கட்டளை பிறப்பித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னராக சுதந்திர தமிழீழம் கோரும் 'பயங்கரவாதிகளை'யும் அவர்களது 'பயங்கரவாதத்தையும்' அதன் சகல வடிவங்களையும் ஒழித்துக் கட்டிவிட்டு எனக்கு வெற்றிச் செய்தி கொண்டுவாருங்கள் என்பதே அந்தக் கட்டளையாகும். தமிழீழ சுதந்திரத்துக்கான விடுதலைப் போருக்கு எதிராக சிறிலங்கா தரப்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தியோகப் பற்றற்ற முதல் யுத்தப் பிரகடனம் இதுவேயாகும்.

அப்போதைய, சிங்கள சனாதிபதி ஜே. ஆரின் கட்டளையை சிரமேற்கொண்டு யுத்த களம் புகுந்த சிங்களப் படைத் தளபதி வீரதுங்கா பல அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்துவிட்டு தமிழீழப் 'பயங்கரவாதிகளை'யும் 'பயங்கரவாதத்தை'யும் ஒழித்துக் கட்டிவிட்டதாக ஆறுமாதகாலக் கெடு முடிந்ததும் சனாதிபதிக்கு ஓலை அனுப்பினார்! இதேபோல் 15 ஆண்டுகள் கழிந்து நவீன சப்புமால் குமாரய என சிங்கள அரசியல்வாதிகளாலும் பௌத்த மதவாதிகளாலும் அழைக்கப்படும் அனுருத்த ரத்வத்தை சிங்கள இனத்தின் எதிரிகளைத் துவம்சம் செய்து 'யாப்பனுவபட்டின'வையை எதிரிகளிடம் இருந்து மீளப் பிடித்து உங்கள் கட்டளைப் பிரகாரம் அங்கு சிங்கக் கொடியைப் பறக்க விட்டு சிறிலங்காவின் ஆஞ்ஞாசக்கரத்தை மீண்டும் நிலைநாட்டி விட்டதாக சனாதிபதி சந்திரிகாவிற்கு பௌத்த சகாப்தம் 2,539இல் சுபயோக சுபமுகூர்த்தம் பார்த்து ஓலை அனுப்பினார்!

எதிரியைப் போரில் வெல்ல வேண்டுமென்றால் எதிரியினது பலத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பது போர்த் தந்திரங்கள் பற்றிய புத்தகத்தில் சொல்லிக் கொடுக்கப்படுகிற பால பாடமாகும். வள்ளுவர் தொடங்கி மாசேதுங் ஈறாக இதனை வலியுறுத்தியுள்ளார்கள்.

*வினைவலியும் தன்வலியும் மாற்றான்வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் -குறள் 471*

செயலின் வலிமை, தன்வலிமை, எதிரியின் வலிமை, இருவருக்கும் துணையாவார் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்கிறார் பொதுமறை தந்த வள்ளுவர். வள்ளுவரின் குறளைப் படிக்காத காரணத்தாலோ என்னவோ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு அவர்களைப் பலவீனப் படுத்திவிட்டோமென்று சிங்களப் படைத் தளபதிகளும் சிங்கள அமைச்சர்களும் ஓயாது சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

கடந்த 15 ஆண்டுகால வரலாற்றை ஆழ்ந்து படிப்பவர்கள் விடுதலைப் புலிகள் பலவீனப் படுவதற்கு முற்றிலும் மாறாக ஒவ்வொரு ஆண்டும் முன்னரை விட அதிக பலத்தோடு ஓங்கி வளர்ந்து தமிழீழத்தின் நிலையான இராணுவமாக பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டதைப் பார்க்கலாம்.

ஈழப்போர் ஆரம்பமான பின் 40க்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள், இரண்டு தளங்கள், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டுள்ளன. பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

1987 யூலை 5 - நெல்லியடி சிங்கள இராணுவ முகாம் முதல் கரும்புலி மில்லரின் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டது. பல இராணுவத்தினர் சாவு.

1990 நவம்பர் 22 - மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு. முகாமில்

தொடர்ச்சி 5 ம் பக்கம்.......

தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.

- திலீபன் -

www.tamilarangam.net



## சிறுகதை



# இந்து சமுத்திரத்தில் ஒரு இரவுப் பயணம்

- கண்ணன்


பௌர்ணமி நிலவின் பேரொளியில் பரந்த பெருங் கடல் பளபளத்தது. ஓய்வின்றி ஓடிவரும் வெண்திரைகள் படகில் மோதி உடைந்தன. உடலைத்தழுவிய மென்காற்று, பகல் முழுவதும் வன்னி மண்ணின் கரடுமுரடான பாதைகளில் பயணஞ் செய்து அலுத்த மேனிக்கு சுகமளித்தது. ஆழ்கடலில் 'ட்றோலர்' எனும் பெரும் படகில் எங்களை ஏற்றிவிட்டு அந்தச் சிறுபடகு திரும்பிப் போய்க் கொண்டிருந்தது.

எங்களில் பத்துப்பேர்

'மேல் தட்டில் இருக்க வேண்டாம். உள்ளே இறங்கி இருங்கோ' படகு ஓட்டியின் கட்டளை மெல்லக் கேட்டது.

சதுரக் கிணறுபோல் இருந்த ஒடுங்கிய பலகை வாயில் ஊடாக ஒவ்வொருவராக உள்ளே இறங்கினோம். அங்கே தடிகளும் வலைகளும் பலகைகளும் பரவிக்கிடந்தன. இரண்டு பலகைகளை அசைத்து இருக்க வசதி செய்து கொண்டோம்.

அதுவரை மெல்ல இயங்கிக் கொண்டிருந்த என்ஜினை ஏற்றி இயக்கிவிட்டான் ஓட்டி. பெருஞ் சத்தமிட்டு ஓடத் தொடங்கியது படகு. வெளியே ஆனந்தமான நிலவு. உள்ளே ஒருவரையொருவர் பார்க்க முடியாதபடி இருட்டு. ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளும் முயற்சியையும் தடுத்து என்ஜின் 'கறார்..... கறார்...' என இரைந்தது. படகின் உள்ளே கணுக்கால் மீறிய உப்பு நீர். கால்களைத்



தூக்கி எதிரே குறுக்காக இருந்த தடிகளில் வைத்துக்கொள்ள முடிந்தது.

நேரம் 9.30. காலை மூன்று மணிக்கே அக்கரை போய்ச் சேர்ந்துவிடலாம் என்று சிலர் சொன்ன ஞாபகம். அப்படியென்றால் ஆறு மணித்தியாலங்களில் ... சே, ஏன்? மாலை ஐந்து மணிக்குத்தான் போகட்டுமே. இருட்டில் எங்களை இறக்கிவிட்டு றோலரை திருப்பிக்கொண்டு போய் விடுவான் ஓட்டி. அதுவரை காதுகளைத் துளைக்கும் இந்த என்ஜீன் இரைச்சலை சகித்துக் கொண்டு இருந்தாக வேண்டும். உடல் அலுத்தது. கண்களை நித்திரை தழுவியது. ட்றோலர் அசைந்தாடியபடி போய்க் கொண்டிருந்தது. எதிரே இருந்த பலகையில் காலைப் போட்டுப் படுத்துக்கொள்ள முடிந்தது. சுமார் ஒரு மணி நேரம் ஓடியிருக்கும். 'டமார்...' என்ற திடீர் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன். 'என்ன நடந்தது?' விழித்திருந்தவர்கள் 'என்ஜின் வேலை நிறுத்தம்' என்றனர். கடவுளே அப்படியென்றால் யார் காப்பாற்ற வருவார்கள்? நாட்கணக்கில் கடலில் அலையும் படகுகளின் கதைகள் நினைவில் வந்தன.

ஓட்டியின் உதவியாளன் கையில் சாவிகளுடன் வந்து இருட்டில் எதையோ கழற்றிக் கொண்டிருந்தான். எங்களில் ஒருவன் தன்னிடமிருந்த 'டோர்ச்'ஐ கொடுத்து உதவினான். துரிமாக கழட்டி, பூட்டி என்ஜினை இயக்கி விட்டு அவன் எழுந்தான். வெற்றிவீரனாக. ட்றோலர் நகர்ந்தது.

இதயம் இயல்பு நிலைக்குத் திரும்பியது. மீண்டும் அதே 'கறார்' சத்தம் தலை வலித்தது. மேலே போனால் சுகமாக இருக்கும் என்றெண்ணி மேல் தட்டில் பிடித்து தலையை நீட்டி உன்னி எழுந்தேன். நிலவொளியில் கை மணிக்கூடு நேரம் 11.00 என்று காட்டியது. வெள்ளிப் பாளங்களாக ஓய்வின்றி ஓடி உடைந்து சிதறும் அலைகளைப் பார்த்து மகிழ்ந்தேன்.

'உள்ளே வா.... வா....' என்று கீழே குரல்கள் எழுந்தன. ட்றோலர் ஓடிக் கொண்டிருந்தது. வேகமோ மணிக்கு ஐந்து மைல்தான் என்று சொல்லலாம். அரை மனத்தோடு உள்ளே இறங்கினேன். மீண்டும் இருட்டில் வெளியுலகைப் பாராமல் இந்து மா சமுத்திரத்தில் போய்க் கொண்டிருக்கிறேன். பரந்த நெடுங்கடலின் அழகைப் பாராமல் தமிழ் நாட்டின் கரை தெரிகிறதா என்று பார்க்க முடியாமல் இருளில் அடைபட்டுக் கிடக்க நேர்ந்தது. சில நிமிடங்கள் சென்றன. எவரும் பேசவில்லை. நித்திரைத் தூக்கமோ? சத்தமின்றி எழுந்து மேலே தாவினேன். நடுவே இருந்த கம்பத்தில் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றைப் பிடித்தபடி அமர்ந்தேன். இருகரையும் அலைகள் ட்றோலரில் மோதிச் சிதறின. மழைத்தூறல்கள் போல் மேல் தட்டில் கடல்நீர்.

ட்றோலரின் அசைவு அதிகரித்தது. முன் . பின்னாக உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லும் பெரும் படகில் செயல் அச்சமூட்டியது. பலமான காற்று உயரத் தாவும் அலைகள். நாற்புறமும் ஆழ்கடல். கரை தெரியும் அறிகுறி இல்லை. கண்ணில் வேறு படகுகள் தென்படவில்லை. கணப்பொழுதில் இதயம் கனத்தது. படகு முன்னே நகர நினைவலைகள் பின்னோக்கிப் பறந்தன.

அகதிகளை ஏற்றி வந்து ஆழ்கடலில் கவிழ்ந்த படகுகள்... கரையொதுங்கிய சடலங்கள்.....பிறந்த மண்ணில் அயல் நாட்டவனின் அக்கிரமங்களுக்குப் பயந்து தமிழகத்தில் அச்சமின்றி வாழலாம் என்றெண்ணிப் படகில் ஏறினால் கடலில் மூழ்கிப் பலியாகும் அவலம்? இந்த நேரம் அங்கே என்ன நடக்கிறதோ! எங்கிருந்து செல் வருமோ? யார் வீட்டில் விழுமோ? எத்தனை பேர் பலியாகிப் போவாரோ? பகல் இரவு பாராமல் 'கிபீர்' என்ற போர் விமானம் ஏழெட்டுக் குண்டுகளைப் போட்டு விட்டு ஒருநொடியில் மறையுமோ? எத்தனை பேர் சதைத் துண்டுகளாய்...அட உணவுப் பொருட்களுக்குத் தடை... நோய்க்கு மருந்தில்லை, அதற்குத் தடை...கடலில் மீன் பிடிக்கத் தடை. வயலில் நெல் விதைக்கத் தடை, மழை வழங்கும் மரங்கள் வளர்க்கத் தடை. வளங்கொழிக்கும் தென்னையும் பனையும் படையினரின் காவலரண்களுக்கு தூண்களாகும் துயரம்...இடம் பெயர்ந்தவர்களின் வீடுகளில் கூரைகளையும் மரங்களையும் கதவுகளையும் கழற்றி முகாமுக்கு வேலி கட்டும் காக்கிகள்... திறந்தே கிடக்கும் வீடுகளில் எஞ்சியதை அள்ளும் எம்மவர்– அயலவர். கடலம்மா! ஆதரிப்பதற்குப் பதிலாக, அரவணைத்து அக்கரை சேர்ப்பதற்கு மாறாக ஆழத்தில் மூழ்கவைக்கிறாயே, ஏனம்மா!

'தலை காட்டாமல் உள்ளே இருங்க' என்றான். உதவி ஓட்டி திடுக்கிட்டவனாய் அவன் பக்கம் பார்த்தேன். தொலைவில் மின் விளக்குகளின் வரிசை தெரிந்தது. தமிழ் நாட்டின் கரை தெரிகிறதோ? சே... அதற்குள்ளாகவா? உள்ளேயிருந்து ஒரு குரல் 'நேவி வந்தாலும் வருவான் உள்ளே வா'

ஓ...மன்னார்...மூன்று மணித்தியாலங்கள் ஓடியும் மன்னாரைக் கடக்கவில்லையா? கீழே இறங்கி அமர்ந்தேன். தூக்கம் வந்தது.

அடுக்கியிருந்த பெட்டிப் பொதிகளின் மேல் தலையைச் சாய்த்தேன். நித்திரை வரவில்லை. 'நேவி' வருவானோ...?

தொடர்ச்சி 6ம் பக்கம்.....

www.tamilarangam.net



உலக அரங்கு

# கொங்கோ உள்நாட்டு போர் பிரதேச ரீதியான போராக மாறுமா?

ஆபிரிக்காவின் மூன்றாவது பெரிய நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் நடைபெறும் உள் நாட்டுப் போரில் கொங்கோவின் கிழக்கே உள்ள நாடுகளாக ருவாண்டாவும் உகண்டாவும் தெற்கே உள்ள அயலவர்களான அங்கோலா மற்றும் சிம்பாவேயுடன் மோதலில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை உருவாகி வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

கொங்கோவின் சனாதிபதியான லாறண்ட் கபிலாவுக்கு ஆதரவாக சிம்பாப்வே தனது துருப்புக்களை நிலைநிறுத்தி வருவதாக அறிய வருகிறது.

மேலும் கபிலாவுக்கு ஆதரவாக அங்கோலாவில் இருந்தும் துருப்பினர் கொங்கோவின் தலைநகர் கின்சாசாவில் இறக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ருவாண்டாவானது பின்வாங்காவிட்டால் இப்போரானது ஒரு நூற்றாண்டுவரை தொடரக்கூடிய அபாயநிலை தோன்றியுள்ளதாக கொங்கோவின் சுகாதாரா அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாத முற்பகுதியில் கொங்கோவில் ஆரம்பமான கிளர்ச்சிக்குப் பின்னணியில் ருவாண்டாவும் உகண்டாவும் உள்ளதென கபிலா குற்றம் சாட்டியுள்ளார். கொங்கோவின் கிழக்கில் இக்கிளர்ச்சியை ஆரம்பித்தவர்கள் கின்சாசா வரை முன்னேறப் போவதாகச் சபதம் எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.




இவ்விருநாடுகளும் இக் குற்றச்சாட்டுக்ளை மறுதலித்த அதே வேளை கபிலாவுக்கு ஆதரவாக ஏனைய நாடுகள் துருப்பினரை அனுப்பினால் தானும் தலையிடுவேன் என ருவாண்டா எச்சரித்துள்ளது.

ஆபிரிக்காவில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்தவர் எனப் பெயர் பெற்ற சர்வாதிகாரி மொபுட்டு செசி சீக்கோவின் ஆட்சியினைக் கவிழ்த்து கபிலாவைப் பதவியில் இருத்திய ருவாண்டாவுடன் தொடர்புள்ள அதே கிளர்ச்சியாளர்கள் தாம் 15 மாதகால ஆட்சியின் பின் இன்று கபிலாவை பதவியினின்றும் விலத்த முன்னிற்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொங்கோவின் கிழக்குப் பகுதியில் ருவாண்டா இருப்பதனால் இவ் எல்லைப் பிரதேசத்தில் ஒரு ஸ்திரத் தன்மையை ஏற்படுத்த கபிலா தவறிவிட்டார் என இக் கிளர்ச்சியாளர்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

'நிரந்தரமான தீர்வினைத் தேடும் கொங்கோவின் மக்களுக்கு உதவி புரிவதற்காகத் தாம் தலையிடுவதற்கு உரிமை இருக்கிறது' என ருவாண்டா அரசாங்க அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்டுமாத இராணுவ போராட்டத்தின் பின்பு 1997 மே மாதம் அன்றைய சயர் நாட்டின் தலைநகரான கின்சாசாவை நோக்கி வெற்றிப் பெருமிதத்துடன்

**சாள்ஸ் தேவசகாயம்**

கபிலா வீறு நடையில் சென்ற போது வீதியின் இரு மருங்கிலும் இருந்த பொதுமக்கள் அவரை ஆர்ப்பரித்து வரவேற்றனர். சர்வாதிகாரி மொபுட்டுவின் அடக்குமுறையின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக் கஷ்டங்களை அனுபவித்த சயர் நாட்டு மக்கள் கெரில்லாத் தலைவர் கபிலா புதிய ஆபிரிக்காவிற்கான புது விதமான தலைவர் என மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால், பதவிக்கு வந்த குறுகிய காலத்திலேயே அவருக்கிருந்த செல்வாக்கு சரிந்து செல்லத் தொடங்கிற்று. மொபுட்டுவை அகற்றுவதே தனது முக்கிய நோக்கம் என்றும் தனக்கு பதவி ஆசை இல்லை என்றும் அவர் அகற்றப்பட்டபின் குறுகிய காலத்துள் சனநாயக ரீதியான தேர்தல்கள் நடாத்தப்படும் என்றும் இவர் அறிவித்திருந்தார். எனினும் கின்சாசா கைப்பற்றப்பட்டவுடன் இவர் தன்னைத் தானே சனாதிபதியாகப் பிரகடனம் செய்தது மட்டுமன்றி 1999 வரை தேர்தல்களையும் தள்ளிப் போட்டுள்ளார்.

இன்று கபிலாவும் மொபுட்டு போலவே ஆட்சி செய்கின்றார் எனப் பலரும் குறை கூறுகின்றனர். ஆபிரிக்காவின் 3வது பெரிய நாட்டின் தலைவராக வரவேண்டும் என்ற எண்ணத்தில் சுமார் 180,000 பேர் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தார் என இன்று இவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

மொபுட்டுவின் ஆட்சியின் கீழ் இருந்த அளவில் இல்லாவிட்டாலும் அரசாங்க மட்டத்தில் ஊழல்கள் மீண்டும் தலைவிரித்தாடுவதாக அறிவிக்கப்படுகிறது.

இதேபோல மொபுட்டு பாணியில் கபிலாவின் ஆட்சியிலும் இன ரீதியான இராணுவ நியமனங்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

மேலும் எதிர்கட்சித் தரப்பினர், மனித உரிமைகளுக்காக பாடுபடுவோர், வர்த்தகர்கள், செய்தித் துறையினர் எனப் பலரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். மொபுட்டு ஆட்சியின் கீழ் உள்ளூர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட ஒரு அரசியல்வாதி மீண்டும் கபிலாவின் ஆட்சியின் கீழும் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கபிலா ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக நடைபெற்ற படுகொலைகள் விசாரிக்கப்படல் வேண்டும் என மனித உரிமை அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோள் செவிடன் காதில் சங்கூதியது மாதிரி அமைந்தது. இதனால் மேற்கு நாடுகளும் கபிலாவுக்கான தமது உதவிகளை வரையறுத்துக் கொண்டன.

இதேவேளை மத்திய ஆபிரிக்காவின் இன ரீதியான வெடிமருந்துக் கிடங்கு மீது மீண்டும் இனவாதத் தீப்பொறி விழுந்து பிரதேச ரீதியான அழிவுகளை ஏற்படுத்தலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

உண்மையில் கொங்கோவின் தற்போதைய முரண்பாடுகளுக்கும் ருவாண்டாவின் இனப் பிரச்சினைக்கும் இடையே தொடர்புகள் உண்டு. எனவே ருவாண்டாவில் இடம்பெற்ற இனப் படுகொலைகள் ஞாபகம் வருவதனைத் தடுக்க முடியாது. 1994இல் ருவாண்டாவில் இடம்பெற்ற இவ் இனப்படுகொலைகளின் போது சுமார் 500,000க்கு மேற்பட்ட டுட்சி இனத்தவரும் மிதவாத ஹிட்டு இனத்தவரும் கொல்லப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் இப் பிரச்சினை ஆரம்பமானதில் இருந்து இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாகச் சேர்ந்து கின்சாசாவில் வீடுவீடாகச் சென்று டுட்சி இனத்தவரை அழைத்துக் கொண்டு சென்றனர். அயலில் உள்ள டுட்சி இனத்தவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான டுட்சி இனத்தவர் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் சில பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் இராச தந்திர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்டது.



லாறண்ட் கபிலா

ஆனால் டுட்சி இனத்தவருக்குப் பாதுகாப்பளிக்கும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது என கொங்கோவின் உள் நாட்டமைச்சர் விளக்கமளித்தார்.

இதேசமயம், கொங்கோவில் உள்ள டுட்சி கிளர்ச்சிக் காரர்களுக்கு ருவாண்டாவும் உகண்டாவும் ஆதரவு அளிக்கின்றன எனக் குற்றம் சாட்டிய கபிலா கொங்கோவின் பொது மக்களுக்கு ஆயுதமளிக்கப் போவதாகவும் ருவாண்டாவின் தலை நகரான கிகாலி வரை தனது உள்நாட்டுப் போரை விஸ்தரிக்கப் போவதாகவும் சபதமெடுத்தார். 'டுட்சி சாம்ராச்சியம் ஒன்றை இவர்கள் உருவாக்கப் பார்க்கிறார்கள் எனக் கூறிய கபிலா 'தேரை ஒன்று (ருவாண்டா) யானையை (கொங்கோ) விழுங்குவதற்கு நாம் அனுமதிக்கலாமா?' என்ற கேள்வியை எழுப்பி கொங்கோ மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பினார்.

கொங்கோவில் உள்ள டுட்சி இனத்தவர் 'பான்யாமுலங்கே' என அழைக்கப்படுகின்றனர். ருவாண்டாவிலும், புருண்டியிலும் இடம்பெற்ற இனப் படுகொலைகளில் இருந்தும் தப்பிக்க பல சந்ததிக்கு முன்பாகப் புலம் பெயர்ந்த இவர்கள் கொங்கோ

தொடர்ச்சி 7 ம் பக்கம்......

தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

- திலீபன் -

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்
### அத்தியாயம் இருபத்திமூன்று

(தொடர்ச்சி)

பிரச்சினைகளைத் தீர்க்க கொன்ராட், கொடுத்த மூன்று நாள் அவகாசம் இப்போ இரு வாரங்களுக்கு மேல் நீடித்துப் போய்விட்டது. ஜேர்மனிய தாக்குதல்கள் தொடங்கிப் பதினைந்தாவது நாள், மீட்பாளர் குழு தலைமையகத்திலிருந்து சில கட்டிடங்கள் தள்ளியிருந்த கட்டிடத்திலிருந்து றெபேக்கா சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். நேராக வந்து தாக்கிய மோட்டார் குண்டு ஒன்றினால், அவளைத் தவிர்த்து ஏனைய கட்டிடங்களிலிருந்த போராளிகள் கொல்லப்பட்டனர். தொடர்ச்சியாக ஏவப்பட்ட மோட்டார்களால் கட்டிடத்தின் சுவர்கள் இடிந்துவிட றெபேக்கா வீதிக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. பின்வாங்க முடியாதவாறு ஜேர்மனியர்கள் அவளைச் சூழ்ந்து வரத் தொடங்கியதும் தனது ஆடைகளுக்குக் கீழ் வைத்திருந்த கைக்குண்டு ஒன்றை எடுத்து அதன் கிளிப்பை இழுத்தபடி மூன்று ஜேர்மனியர்களை நோக்கி ஓடியவள், தன்னையும் அந்த மூன்று ஜேர்மனியர்களையும் அதனால் கொன்றாள்.

மூன்று வாரங்களின் பின் ஸ்றூப் தன்னுடைய தாக்குதல் முறைகளை மாற்றிக் கொள்ளக் கட்டாயப்படுத்தப் பட்டான். அவனுக்குச் சேதம் மிக அதிகமாக இருந்ததோடு, யூதர்களின் துணிகரத்தை எவ்வித பிரசார யுத்திகளாலும் இருட்டடிக்க முடியாமலிருந்தது. ஸ்றூப் தன் ஆட்களை வெளியே இழுத்து சேரியைச் சூழ்ந்துகொண்டிருந்த பிரிவுகளைப் பலப்படுத்தி, ஒரு முற்றுகை நிலையைப் பிரகடனப்படுத்தினான். கனரகப் பீரங்கிகளைப் பயன்படுத்தி, யூதர்கள் தற்பாதுகாப்பு யுத்தத்திற்கு மிகத் திறமையாகப் பயன்படுத்திய கட்டடங்களை இடித்து அழித்துவிடும் நோக்கில் மிக அருகிலிருந்து இலக்குகளைத் தாக்கினான். இரவிலோ ஹெயின்கெல் குண்டுவீச்சு விமானங்கள் எரிகுண்டுகளைச் சரமாரியாகச் சேரிக்குள் வீசின.

இஸட் ஓ. பி யின் தலைமைக் காரியாலயத்தில் நடந்த கூட்டம் ஒன்றின் பின் மீட்பாளர் குழுக்காப்பரண் ஒன்றிற்கு மண்டெக் திரும்பிவந்தான். அவனும் அவனுடைய போராளிகளும் களைப்பு, பசி, தாகம் போன்றவற்றால் அரைகுறை உயிரோடு இருப்பது போல் இருந்தார்கள். அதிகமானோர் எரிகாயங்களுக்கு உள்ளாகி இருந்தார்கள். அவர்கள் அவனைச் சுற்றிக் கூடினார்கள்.

'ஜேர்மன் பீரங்கிகள் அதிகமான காப்பரண்களை, கட்டடங்களை அழித்துவிட்டன. எஞ்சியுள்ளவை எரிந்துகொண்டிருக்கின்றன' என்றான்.

'தலைமைறைவு எதிர்ப்பியக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியவில்லையா?'

'அவர்களுடன் தொடர்புகொண்டது உண்மைதான். அவர்கள் எங்களுக்கு உதவத் தயாராக இல்லை. எங்கள் கையிலிருக்கும் நீர், உணவு, ரவைகள் தவிர்ந்த வேறு பொருட்களை எதிர்பார்க்க முடியாது. எமது தொலைத்தொடர்பு வசதிகள் கிட்டத்தட்ட அழிந்துபோயின. சுருக்கமாகச் சொல்லப்போனால் என் அருமை நண்பர்களே இப்போது நாங்கள் நிர்ணயிக்கப்பட்ட எந்தத் திட்டப்படியும் போராட முடியாது. ஒவ்வொரு காப்பரணும் தானே தனிய போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இஸற் ஓ.பி யுடன் தூதுவர் மூலம் தொடர்பு கொள்ள முயற்சிப்போம். ஆனால் எம்முடைய தாக்குதல்களையும் அதற்கான திட்டமிடுதல்களையும் நாமே செய்து ஜேர்மனியர்கள் வரும்போது மீண்டும் எதிர் கொள்வோம்.'

'எவ்வளவு காலத்திற்கு இப்படித் தாக்குப்பிடிக்க முடியும்?' மண்டெக் எங்கள் ஆட்கள் முப்பது பேர் மட்டும்தான் இருக்கிறோம். பத்துப் பிஸ்ரல்களும், ஆறு றைபிள்களும் மட்டுமே இப்போது இருக்கின்றன.'

மண்டெக் சிரித்துவிட்டு, 'முழுப் போலந்துமே இருபத்தியாறு நாட்கள் தான் தாக்குப் பிடித்தது. நாங்கள் ஏற்கெனவே அதைவிடக் கூடச்செய்து விட்டோம்.' என்றான் பின்பு மீதிருந்த சிறியளவு உணவைப் பகிர்ந்தளித்து விட்டு விடியும்போது ரோந்து ஒன்றை நடாத்த ஒழுங்கு பண்ணினான்.

பெண் போராளிகளில் ஒருத்தியான றிப்கா எங்கிருந்தோ சிறிது சேதமடைந்திருந்த பியானோ எக்கோடியன் ஒன்றை எடுத்து மென்மையான, மந்தக் கதியிலான மெட்டொன்றை இசைக்கத் தொடங்கினாள். நிலத்தின்கீழ் பத்தடி ஆழத்தில் இருந்த அந்த ஈரலிப்பான வழுக்குகின்ற காப்பரணில் இருந்தபடி மீட்பாளர் குழுவில் எஞ்சியிருந்தோர் ஒரு வினோதமான, தணியாத தாகம் ஒன்று பிரதிபலிக்கும் குரல்கள் கலந்தொலிக்க பாடல் ஒன்றைப் பாடினார்கள். மீட்பாளர் குழுவின் கூட்டங்களில் சிறுவர்களாகப் பங்குபற்றியபோது பழகிய பாடல் ஒன்றுதான் அது. எரெற்ஸ் இஸ்ரேலில் இருக்கும் கலிலி என்னும் இடம் அழகானதென்றும் அதன் வயல்களில் விளையும் கோதுமைக் கதிர்கள் இளங்காற்றில் தலைசாய்த்து அசைவது பற்றியும் அப்பாடல் அவர்களுக்குக் கூறியது. இனி எப்போதுமே தாங்கள் காணமுடியாது என்று நன்றாகத் தெரிந்த கலிலியின் வயல்களைப் பற்றி, வார்சோவின் சேரியின் ஈரலிப்பான காப்பரணுள் பாடினார்கள்.

எரிந்து கொண்டிருந்த தீக் கொளுந்துகளிடையேயும், இடிபாடுகளிடையேயும் புகுந்து தங்களை நோக்கி அசைந்து கொண்டிருந்த தனி உருவம் ஒன்றைக்கண்ட காவல் கடமையில் இருந்த போராளி, எச்சரிக்கும் குரலை எழுப்பினான். விளக்குகள் அணைக்கப்பட்டு காப்பரணுள் இருளும் அமைதியும் நிலவியது. அவர்களின் சங்கேத மொழியில் கதவு தட்டப்பட்டது. கதவு திறந்து மூட விளக்குகள் மீள ஒளிர்ந்தன.



'கடவுளே! டொவ் நீ இங்கு என்ன செய்கிறாய்?'

'திரும்பவும் என்னை வெளியே அனுப்பாதே மண்டெக்'

சகோதரர் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்ள டொவ் அழுதான். மண்டெக்கின் கைகள் திரும்பவும், அவனைக் கட்டியணைத்திருப்பது நிம்மதியைத் தந்தது. எல்லோரும் டொவ்வைச் சூழ்ந்து கொண்டனர். போலந்து தலைமறைவு இயக்கம், அவர்கள் நிச்சயமாக உதவிக்கு உள்ளே வராது என்றும், இங்கு நிகழ்ந்த எழுச்சிபற்றி வெளியில் உள்ளோர் அவ்வளவு கவலைப் படாதது பற்றியும் டொவ் சொன்னதைச் செவிமடுத்தார்கள்.

'நான் உள்ளே வந்தபோது மக்கள் சும்மாவே சேற்றில் விழுந்து கிடப்பதை, கழிவு நீர் வடிகால் நிறையக் கண்டேன். அவர்களுக்கு நிற்கக் கூடப் பெலமில்லை. அவர்களுக்கு போக்கிடமில்லை. வார்சோவில் அவர்கள் ஒருவருக்கும் வேண்டப்படாதவர்கள் ஆகி விட்டார்கள்' என்றான் டொவ்.

இப்படியாக இளையவன் டொவ் திரும்பி வந்த அந்த அதேநேரம் புதுமையான ஒன்று சேரியுள் நிகழ்ந்தது. வார்சோவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தப்பிப்போய் கிறிஸ்தவர்கள் போல் வாழ்ந்த யூதர்கள் பலர் – இறுதிப் போராட்டத்தில் பங்குகொள்ளும் நோக்கில் உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். சுயமரியாதையுடன் இறந்து போவது ஒரு கௌரவமான விடயம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

### லியோன் யூறிஸ்

1943 வைகாசி

கடைசியாக மூர்க்கத்தனமான குண்டு வீச்சுகள் நின்றன. தீப்பிழம்புகள் அணைந்து போயின. ஸ்றூப் தனது எஸ். எஸ். துருப்புகளை மீண்டும் ஒரு முறை சேரியுள் நகர்த்தினான். ஆனால் இம்முறை, எல்லாத் துருப்புகளும் அவன் கையில் இருந்தன. யூதர்கட்கு தற்காப்பு நிலைகள் இருக்கவில்லை. தொடர்புகள் அற்றுப் போயிருந்தது. குறிப்பிட்ட திட்டமேதும் இருக்கவில்லை. உணவு, நீர், ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. ஜேர்மனியர்கள் திட்டமிட்ட அடிப்படையில் செயலாற்றினார்கள்.

தொடரும்...

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்ந்த கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை **16 - 10 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## தமிழரெல்லாம்......

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே!

இம்மாதம் 9ம் திகதி புதன்கிழமை காலை புலர்ந்ததும் முதல் செய்தி இரு தமிழ்ப் பொதுமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொடுமை. பசித்த வயிற்றுக்கு உணவளிக்க பாடுபட்டு உழைக்கும் நோக்குடனே அதிகாலை 5 மணிக்கு வலையிழுக்க சந்திவெளிக் கடற்கரைக்கு சென்ற 26 வயதுடைய எஸ். இராஜேஸ்வரன் அவர் தம்பி எஸ். யோகேஸ்வரன் என்னும் இரு சகோதரர்களையும் சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சுட்டுக் கொன்ற செய்தி தென் தமிழீழத்தில் இருந்து வந்தது.

மறுநாள் 10ம் திகதி வடமராட்சியில் தொண்டமானாற்றில் கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பில் பயிலும் நிமலன் பரமேஸ்வரன் என்னும் மாணவனும் அவன் தாயாரான 48 வயதுடைய கோணேஸ்வரி பரமேஸ்வரனும் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் தம் இன்னுயிர் நீத்த துயர செய்தி கிடைக்கப் பெற்றது. இதே தினத்தில் செம்பியன்பற்று மற்றும் ஆளியவளைப் பகுதிகளைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவம் 200க்கும் மேற்பட்ட தமிழர்களை செம்பியன் பற்று சனசமுக நிலையத்திற்கு முன்னால் கொண்டு சென்று கடுமையாக விசாரணை செய்து அவர்களில் நால்வரை மேலதிக விசாரணக்காக கொண்டு சென்றுள்ளதாக செய்திகள் தெரிவித்தன. இவர்களுள் மூவர் செம்பியன்பற்றைச் சேர்ந்த 42 வயதான சதாசிவம் பரதன், ஆளியவளையைச் சேர்ந்த 24 வயது நிரம்பிய விஜயசந்திரன் குடாரப்புவைச் சேர்ந்த 50 வயதான சீமாம்பிள்ளை மரியாம்பிள்ளை என்கின்ற பொதுமக்கள் எனவும் நான்காவது ஆள் குறித்த விபரங்கள் தெரியவில்லை எனவும் செய்திகள் தெரிவித்தன. அத்துடன் இவர்கள் அனைவரும் பொது மக்கள் முன்னிலையில் கடுமையாகத் தாக்கப்பட்டனர் எனவும் அச் செய்தி மேலும் தெிவித்திருந்தது. இதற்கிடை கிளிநொச்சியில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அண்மையாக உள்ள வளவொன்றில் தேங்காய் பிடுங்கி கொண்டிருந்த 39 வயதான மாணிக்கம் செல்வநாயகம் என்பவர் சிறிலங்காப் படையினர் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்குண்டு தனது வலது பாதத்தை இழந்த செய்தி கிடைக்கப்பட்டது. இவ்வாறாக நாளும் பொழுதும் எங்கள் தமிழீழ உடன்பிறப்புக்கள் தமிழீழம் எங்கும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறிலங்காப் படையினரால் கொன்றழிக்கப்பட்டும் குற்றுயிராய்த் துடிக்க விடப்பட்டும் வதைக்கப்படும் செய்திகளை செய்தி முகவர்கள் வெளியிட்டு வருவது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. பாலியல் வன்முறைகள் – காணாமல் போக்குதல்கள் – கொள்ளைகள்– அச்சுறுத்தல்கள் சுற்றி வளைப்புக்கள் – கைதாக்குதல்கள் என எத்தனையோ மனித சித்திரவதைகளுக்கு இடையில் எம் மக்கள் சோற்றுக்கும் குழந்தைக்குப் பாலுக்கும் மருந்துக்கும் துடிக்கின்ற சோகவாழ்வில் தவிப்பது உலகறிந்த உண்மை.

ஆனால் புலம்பெயர் நாடுகளில் இருந்து ஊருக்குச் சென்று வரும் படித்த வயது முதிர்ந்த பெரியார்கள் சிலர் அகதியாக தஞ்சம் பெற்று அந்நாட்டின் குடிகளாக மாறிய பின்னர் ஊருக்கு விசிட் அடிக்கும் சிலர் – கூசாமல் கூறும் வார்த்தைகள் சிறிலங்காவின் நிலைமை வழமை என்ற உண்மைக்கு மாறான பிரச்சாரத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டுவதாக உள்ளன. சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்ட முறையில் உண்மைகளை மூடிமறைப்பதில் கைதேர்ந்த நிறுவனம். வெளிநாடுகளில் இருந்து வரும் முதியவர்களுக்கு சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகளைத் தளர்த்துவது என்பது அதன் திட்டமிட்ட ஒரு செயற்பாடு. இதனால் சிலவேளைகளில் விசிட்டில் வரும் பெரியவர்களுக்கு தமிழீழ சாதாரண மக்களின் கொடுமையான அனுபவங்களை அனுபவிக்க சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. எனக்கு அந்த கொடிய அனுபவங்கள் ஏற்படவில்லை என்பதற்காக மற்றவர்களுக்குத் தினம் தினம் ஏற்படும் கொடிய அனுபவங்களை மறைப்பதும் மறுப்பதும் படு முட்டாள்தனமான செயல்மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு செய்யும் ஊறாகவும் அமைகின்றது. ஊருக்குப் போகும் எவருக்கும் அங்கே சிறிலங்காவால் இடிக்கப்பட்டு தாக்கப்பட்டு உருக்குலைக்கப்பட்டுள்ள எம் இனிய தேசத்தின் அழிவுகள் தான் முதலில் தென்படும் காட்சிகள். தாய் மேனி, குண்டுகளால் துளைக்கப்பட்ட காட்சி கண்டும் இளகாத சுயநலங்கள் எதற்குமே தமது சுயநலங்களை விட்டுவிட போவதில்லை. கும்பிட்ட சாமியும் குண்டடிபட்டு கிடக்கும் அவலநிலை கண்டும் தன்மானம் இல்லையென்றால் சாவீடே இல்லாத வீடில்லை என்ற அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலுமே கிட்டிய குடும்ப உறுப்பினர்களை சிறிலங்கா படைகள் பலிகொண்டுள்ள பூமியாக எங்கள் தாயகம் சோக காவியமாகி நிற்பது கண்டும் உண்மை கூறமறுப்பதென்றால் இவர்களை எந்த வகையில் மனிதனாக எடை போடுவது. பதவிக்கும் புகழுக்கும் முதலிடம் கொடுத்து மற்றவனை உற்றவனை நம்மவனை நம் குடும்பமாக கருதாத நேற்றைய செயற்பாடுகளின் விளைவே இன்றைய எமது தாழ் நிலை. இதனை இனங் கண்டு மற்றவர் வாழ தம்முயிர் ஈயும் தமிழீழ விடுதலைப் புலிகளாக எம் இளம் சந்ததி எழுந்து நிற்கின்றது. சாதியால் மதத்தால் பிரதேசத்தால் அந்தஸ்த்தால் தமிழீழ மக்கள் பிரிந்து நின்ற காலம் நம்மில் நின்று விடை பெற்றுவிட்டது. புதிய ஒரு புரட்சிச் சமுதாயம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் வாழும் இன்றைய சமுதாயம். அடக்குமுறைகளின் சகல வடிவங்களும் அழிக்கப்பட்டு மனித நேயமும் மனித ஆற்றலும் போற்றப்படல் வேண்டும் என்ற பெரு நோக்குடன் இயங்கும் சமுதாயம். தமிழீழத் தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் தலைநிமிர்ந்து நிற்கும் இன்றைய எங்கள் தமிழீழ சமுதாயம் விடுதலையின் பொருள் உணர்ந்த பெருங் கூட்டம். சீதனத்தையும் பெண் அடிமைத்தனத்தையும் கூட தகர்ந்தெறியும் சட்டங்களை அமுல்படுத்திய சமுதாயம். ஒடுக்குமுறையற்ற அடக்குமுறையற்ற ஆட்சி ஒன்று எல்லாவிதமான அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் தகர்க்கத் துடிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். இதனால் தான் சில ஆய்வாளர்கள் தமிழ் மக்களின் விடுதலையே சிங்கள மக்களதும் சுபிட்சத்துக்கான உண்மையான அத்திவாரமாக அமையும் என அடித்துக் கூறுகின்றனர். உண்மைகள் உண்மைகளாக முன்வைக்கப்படல் வேண்டும். வரலாறு வரலாறாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். திரிபுகள் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைத்தராது. மனித நேயம் மகத்தானது. அது மதிக்கப்பட அது போற்றப்பட தன் உயிரையே தர ஆயத்தமாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சியை விட சிறந்த ஆட்சி ஒன்றின் கீழ் வாழலாம் என்ற எண்ணம் எந்தத் தமிழீழ நெஞ்சத்திற்கும் இன்று இல்லை. ஆனால் பொதுநலத்திற்காக சுயநலத்தை விட்டுக் கொடுப்பதில் உடன்பாடு இல்லாதவர்கள் சமத்துவமான பகிர்விற்காக யாருக்குமே அதிக தாக்கங்கள் ஏற்படாதவாறு கவனமாக மேற்கொள்ளப்படும் மறு பங்கீட்டு பகிர்வு முறைகளுக்கு மனவிருப்பில்லாதவர்கள் – இன்றைய மாற்றங்களைத் தங்கள் அந்தஸ்துகளின் ச?வுகளாக கருதுபவர்கள்– தமிழர்களிடையிலும் இருக்கத் தான் செய்வர். வரலாற்றை மாற்றுகின்ற வரலாறு ஒன்று ஆரம்பமானதன் பின் வரலாற்று நதி பின்னோக்கி பாயாது. முன்னோக்கி விடுதலை நோக்கி விரைவாக நடக்கத் தொடங்கி விட்ட நாம் சிலரின் பிற்போக்கு கதைகள் கண்டு கலங்க மாட்டோம் என்பது நானும் நீயும் அறிந்த ஒன்று. ஆனால் இந்த விவேகமற்ற மனிதர்களின் பிரச்சாரம் எம்மைக் கொன்றிட நினைக்கும் பகைவனின் பிரச்சாரப் பின்னல்களுக்கும் சர்வதேச நியாயப்படுத்தல்களுக்கும் துணையாகி விடுகின்றது என்ற கவலையில் தான் இப்படிக் கதைக்கும் எம் சகோதரர்களிடம் அவர்களது கதைகளால் விளையக் கூடிய ஆபத்துக்கள் குறித்து எடுத்து விளக்கி அவர்களின் அறியாமையை போக்க நானும் நீயும் முயலவேண்டும் என்பதற்காகவே இக்கடிதம். அது மட்டுமல்ல இவர்களின் ஆழமற்ற ஆராய்வு அற்ற கதைகளினால் புலம் பெயர் நாடுகளில் சிறிலங்காவின் அரசபயங்கரவாதத்திற்கு அஞ்சி அரசியல் தஞ்சம் கோரி நிற்கும் நம்மவர்களின் அரசியல் தஞ்ச விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலமும் பாதிப்படையும் பேரபாயம் உள்ளது. இதனால் இவ்வாறு கூசாமல் கதைப்பவர்களை ஏசாமல் அன்பாக பண்பாக அவர்களின் விபரீத விளையாட்டால் ஏற்படக் கூடிய விபரீதங்களை அவர்களுக்குச் சுட்டிக் காட்டி அவர்கள் எனது வாயிலும் உனது வாயிலும் மட்டுமல்ல தங்கள் பிள்ளைகளினதும் எதிர்கால சந்ததிகளினதும் வாயில் மண் போடுகிறார்கள் என்ற உண்மையை உணர்த்துவோமாக!

ஆசிரியர்.




ஆதிக்க வெறியர்களின் காலுக்குள் நசியக்கண்டும்
பேசிக் கூச்சலிட்ட பிரசங்கியர் பின்னாலே
யாசித்திருந்த எம்மை யோசிக்க வைத்ததமிழ்
தேசியத் தலைவனாலே! தேசம் நிமிர்ந்ததடா!
பேசிய மொழிமறந்து போகின்ற தமிழனே கேள்–
ஆசியக் கண்டத்தில் – ஆங்கொரு நாடுதோன்றும்
வாசமாய் தமிழும் வீசும்!
தமிழரின் தலைகள் நிமிரும்!
மூசிடும் நாசியோடு முண்டம்போல் நீவருவாய்!

*–பரதன், லண்டன்.*

மனங்கள் செந்தணல்களாக அனல்கக்க
மனிதங்கள் ஈழத்தில் கொதிக்கின்றன.
பாலுக்காய் குழந்தை பரிதவிக்கும் வேளையிலே
தமிழ்தாயவள் சோரியவில்லை
தறிபட்டுக்கிடக்கிறாள்
ஈழத்து வீதியிலே இந்த ஈன நிலை கண்டும்
இரங்காதிருக்கலாமோ வெளிநாட்டுத் தமிழரும்!
கணம்தோறும் சிந்தித்து மனக்கரம் நீட்டினால்
ஈழத்தமிழரின் தலைகள் நிமிர்வது நிச்சயம்

*–சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.*

தமிழர் தலைகள் நிமிரும்
தலைவன் சேனைகள் பெருகும்
தமிழர் படையணி வெல்லும்
தாயின் விலங்கு தெறிக்கும்
தமிழர் படும்துயர் தீரும்
தமிழ்ஈழ விடுதலை மலரும்
தமிழர் புகழ் எங்கும் ஒலிக்கும்
தரணியில் புலிக்கொடி பறக்கும்

*–வட்டூர் குணபாலன் கோபிகா, பரிஸ்.*

## தமிழர் தலைகள் நிமிரும்....

காலங்கள் தோறும் அடிமையாய் அடக்கி
காலுக்குள் மிதிக்க நினைத்தவன் அழிந்தான்
தேசியத் தலைவனின் ஆளுமையோடு
திக்கெட்டும் தியாகத்தின் விழிகள் விரிய
தமிழ்த்தாய் பெற்ற வரலாற்று மனிதர்கள்
தேசத்தைக் காக்க தீப்பொறியாய் எழுந்தார்
நேசமுடன் புலம்பெயர்ந்தோர் கரங்களும்
இணைந்தால்
தமிழ்பேசும் உலகில் தமிழர் தலைகள் நிமிரும்....

*–நெடுந்தீவு கோபால், லண்டன்.*

## தியாகதீபம் திலீபனின் 11ஆம் ஆண்டு நினைவுடன்....



விடுதலைப்புலிகள் வாழ
வேண்டுமென்றோ, ஆளவேண்டும்
என்றோ ஆசைகொள்ளவில்லை.
எமது மக்களுக்கு நிரந்தரமான,
சுபிட்சமான எதிர்காலம்
கிடைக்குமானால் நாம் அனைவரும்
மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

– திலீபன் –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பதினொரு ஆண்டுகள் போய்முடிந்த பின்னாலும் ஈரம் உலராத பொழுதுகள்தான் இப்போதும்.

வள்ளிதெய்வானை என
தோழியர்கள் கூடவர
வெள்ளிமயில் ஏறிவரும் கந்தனவன் சந்நிதியில்,
அருள்வேண்டி, காத்திருந்த பொழுது.



நல்லைத்திருநகரில் தொல்லையகற்றுபவன்
வீதிவலம் வருகின்ற வீதி.
கண்ணில் ஏக்கத்தை கனதியாய் தேக்கிவைத்து
பிள்ளையினைப் பார்த்து தேசம் கலங்கியது.

பதினொரு ஆண்டுகள் போய்முடிந்த பின்னாலும்
ஈரம் உலராத பொழுதுகள்தான் இப்போதும்.

இளமைத் துடிப்பதனை அடக்கி ஒடுக்கி,
ஓர் ஞானக்குழந்தை அடம்பிடித்தது.
பட்டினி கிடந்து பாரதத்தை வெற்றிகொள்ள
சாவோடு போராடிச் சாகத்துடித்தது.
எங்கள் மண்ணிலே, முகையவிழ்ந்த முல்லையொன்று,
கந்தவேள் வீதியிலே கடும்தவந்தான் செய்தது.
கள்ளமில்லா மழலையர்தம் கனிவாயில் குடியிருக்கும்
வெள்ளைச் சிரிப்புடனே ஓர் தென்றல் படுத்தது.

பதினொரு ஆண்டுகள் போய்முடிந்த பின்னாலும்
ஈரம் உலராத பொழுதுகள்தான் இப்போதும்.

வானம் பிளந்து மழை பொழிந்தது.
பூமித்தகிப்பை தணிக்கின்ற முயற்சி.
சுற்றிவரச் சூழ்ந்துநின்ற
ஏங்கும் விழிகளிலே
மடையுடைத்துப் பாய்ந்தது வேதனை.

ஆன்மாவைப் பிழிந்து
தேசவிடுதலையின் ஒளிவிளக்கை காக்க நெய்வார்த்த பேரான்மா.

அந்த மெல்லிய தேகம் அசையாமல் கிடந்தது.
அந்த இனிய சிரிப்பும் அழகிழந்து போனது.
அந்த அழகான இதயம் துடிப்படங்கிப்போனது.

ஈரம் சொட்டிய இதயப் பரப்பில் தீயின் விதைப்பு.
உயிர் பிழிந்த அந்தப் பேரான்மா
உயிர் அடக்கி..
தீயை விதைத்தது.
விடுதலைத் தீ!

விழிமடல் உடைத்து அழுத மனங்களிலே விடுதலைத் தீ!
அன்று பற்றிய விடுதலைத் தீ!
இன்றும் எமக்குள்ளே.... எமக்கப்பால் நின்று பற்றி எரிகின்ற
பொழுதுகளை
அன்று விதைத்த அருந்தவத்தை..
இன்று நினைத்தாலும் நெஞ்சில் ஈரம்!
கண்களிலும் ஈரம்!



கண்கட்டிக் காட்டுக்குள் விட்ட காலமதாய்
எமக்குள்ளே மயக்கம்.
பாதை தெரியாத குழப்பம்?
பற்றிக் கைபிடித்து பாதையினைக் காட்டிவிட்டு
தீபமென முன்னால் ஒளியாகிக் கரைந்தவனே!

தமிழர் மனங்களிலே கலந்துவிட்டாய்?
விடுதலையின் முகவரியாய்
மலர்ந்துவிட்டாய்!!

– ஜெயா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்